காஞ்சி

நிறுவனர்:
அண்ணாதுரை

15-12-68

விலை 20 காசு



ஓராசிரியர் இந்திப் பள்ளிகள் இருக்கக்கூடாது ஏன்?

—இரா. முத்துக்குமாரசாமி—

ஓராசிரியர் இந்திப் பள்ளிகள் ஏன் இருக்கக்கூடாது, அப்பள்ளிகளினால் ஏற்படும் தீமைகள் என்ன என்பது தமிழகத்தில் பலருக்குத் தெரியவில்லை. அவர்களுள் சிலர் இராவணன் ஆண்டாலென்ன இராமன் ஆண்டாலென்ன என்று மக்கள் இருந்ததுபோல இந்தியைப் படித்தாலென்ன ஆங்கிலம் படித்தால் என்ன என்றிருக்கிறார்கள். இந்தியும் தமிழ்மொழிக்கு அயல்மொழி, ஆங்கிலமும் அயல்மொழி, இரண்டில் எதைக்கற்றாலென்ன என்று கூறிவருகிறார்கள். இவர்கள் அனைவரும், ஓராசிரியர் இந்திப்பள்ளிகள் ஏன் தமிழகத்தில் இருக்கக்கூடாது என்பதை முழுதும் நன்கு உணர்வார்களானால், எல்லோரும் ஒன்று சேர்ந்து 'ஓராசிரியர் பள்ளிகள் திறக்கப்படக்கூடாது, திறக்கப்படினும் அவற்றை நடத்தவிடக்கூடாது, அப்பள்ளிகளுக்கும் அப்பள்ளிகளில் பணியாற்றுவோருக்கும் எவ்வித ஒத்துழைப்பும் தரக்கூடாது; தம் பிள்ளைகளை அப்பள்ளிகளுக்கு அனுப்புதல்கூடாது' என்ற ஒருமித்த குரலெழுப்பி அதனைச் செயற்படுத்துவர். அதனால் தமிழ் நாட்டுக்கும், மொழிக்கும், மக்களுக்கும் அளவற்ற நன்மைகள் விளையும். ஆதலின் ஓராசிரியர் இந்திப் பள்ளிகள் இருக்கக்கூடாது ஏன் என்பதுபற்றி இக் கட்டுரையில் ஒரு சிறிது ஆராய்வோம்.

இந்தியில் பட்டமோ, சான்றிதழோ பல்கலைக் கழகத்திலோ, தமிழ் நாட்டிலுள்ள இந்தி பிரசார சபையிலோ பெற்ற ஒருவரால் இந்தி பிரசார சபையின் பொருள் உதவியைப்பெற்றோ அல்லது நடுவரசின் பொருள் உதவியைப்பெற்றோ இந்தி மொழியினை விரும்பிக்கற்போருக்கு இலவசமாகக் கற்றுக்கொடுக்கப்படும் இடம் ஓராசிரியர் இந்திப் பள்ளி எனப்படும். இப்பள்ளி ஊருக்கு ஒன்றாக அமையின் தமிழகத்தில் மட்டும் 14,500 பள்ளிகள் ஆகிவிடும்.

ஒவ்வொரு இந்திப் பள்ளியும் தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு என்ற பெரும் பாறையைப் பிளக்கும் ஒரு சிற்றுளியாகும். தமிழினம் என்ற கட்டடத்தில் விழுந்த ஆலரசு விதையாகும். சிற்றுளியைக்கொண்டு கல் தச்சன் சிறுகச்சிறுகப் பெரும்பாறையைப் பிளந்து விடுவதுபோல இந்தி ஆட்சி வெறியர் தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு என்னும் பாறையைப் பிளந்துவிடுவர். ஒரு கட்டிடத்தில் விழுந்த ஆல், அரசு விதைகளைக் கவனிக்காதிருந்தோமென்றால், முளையிலே கிள்ளி எறியாது விட்டால், அது வளர்ந்து கட்டடத்தையே அழித்து விடுவதுபோல தமிழின வளர்ச்சியை, மொழி வளர்ச்சியை, இந்திப் பள்ளிகள் அழித்துவிடும். ஆயிரம் கலம் நெல்லுக்கு ஓர் அந்துப்பூச்சி என்ற பழமொழிக்கிணங்க ஒரு இந்திப்பள்ளி ஆயிரம் தமிழ்ப் பள்ளிகளின் வளர்ச்சியைக் கெடுத்துவிடும். சுருக்கமாகக் கூறினால், ஓராசிரியர் இந்திப்பள்ளி இந்திமொழி ஆதிக்கத்திற்கு வழிவகுத்து தமிழ் மொழியையும், இனத்தையும் அடிமைப்படுத்தி தமிழ் நாட்டின் அரசியல் பொருளாதார வணிக வாழ்வைச் சீர்குலைத்துத் தமிழ் மக்களை துன்பப்படுகுழியில் வீழ்த்துமாதலின் ஓராசிரியர் இந்திப்பள்ளி தமிழகத்தில் இருத்தல்கூடாது.

ஓராசிரியர் இந்திப் பள்ளிகள் திறக்கப்படுமாயின், நடுவரசில் வேலை கிடைக்கும் என்ற நைப்பாசையினால் நிறைய மாணவர்களும் படித்த பெரியோர்களும் இந்தி பயில முன்வருவார்கள். பயின்று தேர்ச்சியும் பெற்று அதற்குரிய சான்றிதழ்களும் பெறுவர். இவ்வாறு சான்றிதழ்கள் பெற்றவர்கள் தொகையைக் கணக்கிட்டு, ஒரு புள்ளி விபரத்தை நடுவரசு எடுத்து தமிழ்நாட்டில் படித்தவர்கள் தொகையில் 25–50%க்கு இந்தி தெரிந்திருப்பதால் இனி நடுவரசிலிருந்து வரும் ஆணைகள், சுற்றறிக்கைகள் எல்லாம் இந்தியிலே வரும்; அதற்குப் பதிலும் இந்தியிலே எழுதப்பட வேண்டும் என்று நமது மாநில அரசுக்கு நடுவரசு ஆணை பிறப்பிக்கும். தமிழ் நாட்டில் இந்தி பயின்றவர்களின் தொகையை வைத்துக்கொண்டே தமிழ் மக்கள், இந்தியை இந்தியாவின் இணைப்பு மொழியாக, ஆட்சி மொழியாக இருக்கஉடன்பட்டுவிட்டனர் என்றும் நடுவரசு கூறும். அதன் விளைவாகத் தமிழ் நாட்டின் அரசு அலுவலகங்களில் எல்லாம் இந்தி ஆணைகள் சுற்றறிக்கைகள் நடமாடத் தொடங்கும். ஆங்கில மொழி களிநடம்புரிந்த இடங்களில் எல்லாம் இந்தி அரக்கி களிநடம்புரியத் தொடங்குவாள். இந்தி மொழியாதிக்கம் மறைமுகமாகவும் நேரடியாகவும் புகுந்துவிடும். ஊசி நுழைய இடங் கொடுத்தால் எருதும் பெர்தியும் உள்ளே நுழைத்து விடுவான் என்ற பழமொழியின் படி ஓராசிரியர் இந்திப் பள்ளிக்கு இடங்கொடுத்தால், இறுதியில் மொழியாதிக்கமும் இன ஆதிக்கமும் இந்தி வெறியர்களால் தமிழகத்தினுள் புகுத்தப்படும். அதனால்தான் உலகமொழி ஆதிக்க வரலாறுகளை உணர்ந்த தமிழக அறிஞர்கள் இந்திப்பள்ளி கூடாதென்று கூறுகின்றனர்.

இந்தி மட்டுமே இந்தியாவின் ஆட்சிமொழி இணைப்பு மொழியானால், இந்தி மொழியாதிக்கம் தமிழகத்தில் மேற்கூறியவாறு ஏற்படுமானால் நமதன்னை மொழியான அருந்தமிழ்மொழி இந்திக்கு அடிமை. மொழிக்கு வளர்ச்சி ஏது? வாழ்வு ஏது! அது குன்றத் தொடங்கும். 'இன்பத் தமிழ் குன்று மேல் தமிழ் நாடெங்கும் இருளாம் 'நைந்தாயெனில் நைந்துபோகும் என் வாழ்வு' என்ற புரட்சிக் கவிஞர் கருத்துகளுக்கு ஏற்பத் தமிழ் நாடெங்கும் அறியாமை இருள் துன்ப இருள் நிறையும். தமிழர் வாழ்வும் நைந்துபோகும். ஒரு மொழியை அடிமையாக்கினால் அவ்வினம் (அம்மொழி பேசுவோர்) தானாக அடிமையாகிவிடும் என்பது உலக வரலாறு காட்டும் உண்மையாதலின் தமிழ்மொழி இந்தி ஆதிக்கத்திற்கு அடிமையாகும் பொழுது இந்தி இனத்திற்குத் தாமாகவே தமிழ் மக்கள் தம்மையறியாமலேயே அடிமையாகிவிடுவர். அதன்பின் நிகழும் அல்லல்களை விரித்துரைப்பின் பெருகும். அடிமையினம் பட்ட துன்பங்களைத் தமிழ் மக்கள் படவேண்டிவரும். எனவே, இந்திமொழி ஆதிக்கம், தமிழ்மொழியையும் இனத்தையும் அடிமையாக்குமாதலின், அவ்வாதிக்கத்திற்கு வழி வகுப்பது ஓராசிரியர் இந்திப் பள்ளியாதலின் அப்பள்ளி தமிழகத்தில் இருக்கவே கூடாது.

ஒரு நாட்டின் அரசியல், பொருளாதார, வணிக வாழ்வின் வளர்ச்சி, முன்னேற்றம் அனைத்தும் அந்நாட்டு மக்கள் பெறும் அரசியல், பொருளாதார, வணிக அறிவையே முற்றிலும் சார்ந்துள்ளது. வளர்ச்சி பெற்ற மேலைநாடுகளுக்கு இணையான அரசியல், பொருளாதார, அறிவியல், தொழில் நுட்பவியல், வணிக அறிவைத் தமிழகம் பெறுமாயின் மேற் கூறிய துறை

(6-ம் பக்கம் பார்க்க)

எத்துணைத் துன்பம் எதிர்ப்பட்டாலும், இறுதியில் ஒரு வினையால் இன்பம் பயக்குமென்பது உறுதியாயின்; அதனைத் துணிவோடு சய்யவேண்டும்,

—குறள் (669)

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 5 15—12—68 இதழ் 21

ஒரு அணி—உடனே தேவை!

இந்திய அரசின் மொழி வெறி விளைக்கின்ற விபரீதங்கள், கட்டுக்கடங்காமல் போய்க் கொண்டிருக்கின்றன என்பதற்கான சான்றுகள், நாளும் நாளும் மிகுந்துகொண்டே போகின்றன.

எப்பாடு பட்டேனும்சரி, இந்திக்கு இந்தியத் துணைக்கண்டத்தில் ஒரு உயரிய அந்தஸ்தை உண்டாக்கிவிடவேண்டுமென்பதற்காக மத்திய அரசு துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கிறது.

பாகிஸ்தானத்து அரசியல் நெருக்கடி நிலைகளின் எதிரொலி காரணமாக, அதைச் சமாளிக்கும் ஒரு ஆயுதமாக, பாகிஸ்தான் இந்தியாமீது எந்த நேரத்திலும் படையெடுக்கக்கூடும் என்ற பேரச்சத்தை இந்தியத் துணைக்கண்டத்து அரசியல் பார்வையாளர்கள் எச்சரிக்கையாக எடுத்துக்காட்டிக்கொண்டு வருகிறார்கள்.

பாக். படையெடுக்குமானால், அப்படியொரு வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிற சீனா வாளாவிருக்குமா? என்பனபோன்ற ஐயங்களும் கூடவே தெரிவிக்கப்பட்டுள்ளன.

ரஷ்யாவின் புதிய ஆயுத உதவியும், அதற்கு அமெரிக்காவின் ஆதரவு நேர்முகமாகவும், மறைமுகமாகவும் இருந்துகொண்டிருக்கிற நிலையும் கவலைப்படத்தக்க சூழ்நிலைகளாகும்.

தொழில் வளர்ச்சிக்கான சில பல முயற்சிகளில் ரஷ்யாவின் ஆதிக்கம் அதிகமாகி, அதனால் ரஷ்யாவே, சில பல யோசனைகளைச் சொல்லி, செயல்படுத்த வேண்டுமென்ற நிலையையும் உண்டாக்கி, இவை இயலாதென்றால், தங்கள் உதவி நிறுத்தப்படும் என்ற அச்சுறுத்தலையும் அன்பாகக் குழைத்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

அரியானாவின் அரசியல், ஒரு விரசமான நாடகக் காட்சியாகிக் கொண்டிருக்கிற வேதனை, நாட்டின் சுதந்திரப் போக்குக்கும் ஜனநாயகத் தத்துவத்துக்கும் ஒரு அறை கூவலாக எழுந்திருக்கிற நிலைமைகளைப் பிரதிபலிப்பதாகும்.

இவையெல்லாம் இந்தியத் துணைக் கண்டத்தின் ஒருமைப்பாட்டைச் சீர்குலைத்துவிடத்தக்கவை அல்ல என்ற மந்தமதி ஏனோ அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஆனால் துணைக்கண்டத்தின் ஒற்றுமைக்கு உதவக்கூடியது 'இந்தி' ஒன்றுதான் என்ற குருட்டுத்தனமான நம்பிக்கையில் மத்திய அரசு செயல்பட்டுக் கொண்டு வரும் போக்குகள், எதிர்காலத்தில் மத்திய அரசின் ஸ்திரத் தன்மை பற்றிய சந்தேகத்தை, இந்தநாட்டுக்கு மட்டுமல்ல—வெளி உலகுக்கேகூட மத்திய அரசே உண்டாக்கிக் காட்டுகிற மதிப்பீடுகளாகத்தான் மதிக்கப்பட வேண்டியிருக்கிறது.

இந்தித் திணிப்பில், எதற்காகத்தான் இந்த அரசு, இந்த அளவுக்குத் தீவிரம் காட்டுகிறது என்று எப்படி எப்படி—எந்தெந்த கோணத்திலிருந்து சிந்தித்துப் பார்த்தாலும், கிடைக்கின்ற விடையெல்லாம், இந்திக்கு ஒரு ஏகாதிபத்திய அந்தஸ்தையுண்டாக்கி, அதன் மூலம் இந்திய பல இன மக்களையும் இந்திக்காரர்களுக்கு அடிமையாக விருக்கச் செய்யும் ஒரு அரசியல் 'சதி' என்றுதான் தெளிவாகத் தெரிகிறது. இந்த கருத்தினை, தமிழகம் இந்தி எதிர்ப்புக்குக் காட்டிய காரணங்களில் ஒன்றாகக் காட்டி இருக்கிறது.

இந்தக் கருத்தை செயல்கள்மூலம் மறுத்துத் தீர வேண்டிய பெருங்கடமை, மத்திய அரசுக்கும் சரி, இந்தி ஆதரவாளர்களுக்கும் சரி, தலையாயதானதாகும்.

இந்தப் பெருங் கடமை தங்களுக்கிருப்பதாகக் காட்டிக்கொள்ளாதது மட்டுமல்ல— இதனைப் புரிந்து கொண்டதாகக்கூட நடிப்பால்கூட வெளிப்படுத்திக் காட்ட முடியவில்லை. மாறாக "அடிமைப்படுத்தியே தீருவோம்" என்ற ஆணவப் போக்கில்தான் தீவிரம் காட்டத் தொடங்கி இருக்கிறார்கள். இந்தத் தீவிர நடவடிக்கைகளில் ஒன்றாகத்தான் மத்திய அரசின் இப்போதைய ஒரு முடிவு நமக்குப்படுகிறது.

மொழி என்பதும், இனம் என்பதும் உணர்ச்சி தொடர்பானதொரு விஷயம். உணர்ச்சி தூண்டப்பட்ட ஒருவனது செயல்கள், நடத்தைகள் எப்படி எப்படி உருப்பெறும் என்று திட்டவட்டமாகக் கணிக்க முடியாது.

ஒரு மொழியினால், பலவந்தமாக இன்னொருமொழி அழிவுத் திசைக்குச் செல்ல நேரிடுகின்றதென்றால், அழிவை நாடிச் செல்லும் இனத்தின் மொழிக்குச் சொந்தக்காரர்களது உணர்ச்சி, எந்த வடிவத்தில் வெடித்துக் கிளம்பும் என்பதற்கு உவமைகள் காட்டமுடியாது.

வானொலியில் இந்திச் செய்தியை ஒலிபரப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விஷயம், இந்தியினைத் தாய் மொழியாகக் கொள்ளாதோரது உணர்ச்சிகளைக் கிளறிவிட்டு வேடிக்கைப் பார்க்கின்றதொரு செயலேயாகும்.

இத்திங்கள் எட்டாம் நாள் முதல் இந்த ஏற்பாடு, இத்துணைக்கண்டத்து அனைத்து வானொலி நிலையங்களிலும் புகுத்தப்பட்டிருக்கிறது.

இந்த ஏற்பாடு ஏற்கெனவே பல மாநிலங்களில் செயலில் இருந்தாலும்கூட, புதிய ஏற்பாட்டுப்படி காலை நேரத்தில் இந்திச் செய்திகளுக்கு முதலிடம் தரப்பட்டு, வட்டாரமொழிச் செய்திகள் பின்னால் தள்ளப்பட்டு இரண்டாந்தரமாக்கப் பட்டுவிட்ட அநீதி, ஜனநாயகத்தின் பேரால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்திக்காரர்களுக்கும், இந்திக்கு வால்பிடித்து, அடிவருடிக்கொண்டிருப்போருக்கும், இந்தியின் கால் நக்கிக்கொண்டிருப்பதாலேயே தங்கள் வயிற்றுத் தீயைத் தணித்துக்கொள்ளும் நிலையிலிருப்போருக்கும் வேண்டுமானால் இது, இனிக்கத்தக்க சுவையான செய்தியாக இருக்க முடியுமே அல்லாமல், இந்தி, அல்லாத இன மக்களுக்கு ஒரு அடிமை ஏற்பாடு என்பதாகத்தானிருக்க முடியும்.

இந்திச் செய்திக்கு முதலிடம் தந்துவிட்டிருக்கிற இந்த ஏற்பாட்டின் மூலம், மத்திய அரசு, எந்த அளவுக்கு ஒருமைப்பாட்டை உண்டாக்க முடியும் என்று நம்புகிறதோ அந்த அளவினைக் காட்டிலும் அதிகமான அளவுக்குப் பிளவு எண்ணங்களைத்தான் உண்டாக்கப் போகிறது என்பது மட்டும் நிச்சயம் என்பதனை, காலம், கண்கெட்டு கருத்திழந்திருப்போருக்கு எடுத்துக் காட்டத்தான் போகிறது.

இந்தி யறியா மாநிலங்களில் இந்த ஏற்பாடு என்ன பயனைத் தந்துவிடப் போகிறது? என்ன லாபம் கிடைக்கும் என்ற திசைக்கே 'இந்தி வெறி' மத்திய அரசை அழைத்துச் செல்லவில்லை, மக்களை ஏமாற்றும் ஒரு ராஜதந்திரத்துக்குத்தான் இது பயன்பட முடியும்—ஒரு இந்தி ஏகாதிபத்தியமாக இந்தியா மாறிக் கொண்டிருக்கிறது என்ற எடுத்துக் காட்டுக்களுக்கு அவை பயன்படட்டும் என்ற முடிவில் செயல்படத் துணிந்துவிட்டார்களோ என்னவோ!

> "இந்த ஏற்பாடு இந்தி பேசாத பகுதி மக்களுக்குப் பெரிய தலைவலியைக்கொடுக்கும்; அதாவது இந்திச் செய்தியறிக்கையை சகிப்புடன் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும்; இல்லையேல் வானொலியையேநிறுத்தி விட்டு, இந்தி அறிக்கை முடியும்வரை வீணேஉட்கார்ந்திருக்கவேண்டும். இதைத் தவிர, வேறு மாற்று வசதிஇல்லை. வானொலி கேட்கும் அருமையான நேரத்தை வீணாக்கும் செயலேயாகும் இது!
>
> வானொலியில் பயன்படுத்தப்படும் இந்திச் சொற்களை இந்தி தெரிந்தவர்களே புரிந்துகொள்ள முடியவில்லை என்று ஏற்கெனவே கூறப்பட்டு வந்திருக்கிறது.
>
> இந்நிலையில் இந்தியே தெரியாத பகுதியில் உள்ளவர்கள் கதி என்ன என்பதைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை."

என்று நிலைமைகளைத் தெளிவாக நாடாளுமன்றத்திலேயே எடுத்துக் காட்டியிருக்கிறார் கழக உறுப்பினர் செழியன் அவர்கள்.

ஏற்கெனவே, இந்திய வானொலி நிகழ்ச்சிகள் பற்றிப் பொதுவான குறைபாடு நாடெங்கும் மலிந்து கொண்டு வருகிறது, இப்போது இதுவும் சேர்ந்து கொண்டால் வானொலிநிகழ்ச்சிகளின் 'பொழுதுபோக்கு வாய்ப்பு'ப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

மொத்தத்தில் மத்திய அரசின் நடுவரசுப் போக்கில் பெரும் அதிருப்தி கொண்டிருக்கிற நாட்டு மக்கள், இதுபோன்ற வெறித்தனமான போக்குகள்—ஏற்பாடுகள் மூலம் தீயவிளைவுகளைத்தான் அறுவடை செய்யவேண்டியவர்களாவார்கள்.

உணர்ச்சியைத் தூண்டிவிட்டு வேடிக்கைப் பார்க்கும் போக்குக்கு மத்திய அரசு உடனடியாக முடிவுக்கு வராமல், புதிய புதிய சிக்கல்களை வேறு அவிழ்த்து விட்டுக்கொண்டு வருகிறது.

துணைப் பிரதமர் மொரார்ஜி தேசாய், 'இந்தியாவைத் துண்டாக்கி வைத்துவிட்டுத்தான் போவேன்' என்பது போன்ற முறையில் பேசவும் தொடங்கி இருக்கிறார், இந்தி ஆதரவு என்ற பேரால்.

> இன்னும் பத்தாண்டுக் காலத்தில் இந்தியை அனைவரும் ஏற்றாக வேண்டும்.

என்ற முறையில் அவரது பேச்சில் சர்வாதிகார வெறித்தனம் மிகுந்து காணப்படுகிறது. அது முடியுமா? முடியாதா என்று சிந்திக்க வேண்டிய நேரத்தில், வானொலிகளையும் அதன் நிகழ்ச்சிகளையும் பாழ்படுத்துவதிலே கவனம் செலுத்த முனைகிறார்கள்.

> தமிழகத்தில் ஓராசிரியர் இந்திப் பள்ளிகள் தொடக்கம்;
>
> வானொலியில் இந்திச் செய்திக்கு முதலிடம்;
>
> என். சி. சி.யில் இந்திச் சொற்களைத்தான் பயன்படுத்த வேண்டும் என்ற கண்டிப்பு.

அனைத்தும் ஒரே நேரத்திலே வெளியாகி யிருக்கிறது; ஒன்றன்பின் ஒன்றாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

இதன் மூலம் அறிய முடிவது, நாடு எக்கேடு கெட்டாலும், நாட்டின் பொருளாதாரம் எப்படிச் சீரழிந்தாலும், நாட்டின்மீது எவர் எப்படி எப்படி ஆதிக்கம் செலுத்த முயன்றாலும், கவலை இல்லை—இந்திக்கு ஒரு ஏகாதிபத்தியம் அமைப்பதில் பின்வாங்குவதில்லை என்ற முடிவைச் செயல்படுத்தத் தொடங்கிவிட்டார்கள் என்பதுதான்!

இந்தி எதிர்ப்புக்காக இன்னுயிர் நீத்தோர் பட்டியல் தமிழகத்தில் முற்றுப் பெற்றுவிடவில்லை; நீளத் தொடங்குகிறது என்ற நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது.

எத்தனையோ தலையாய பிரச்னைகளுக்கிடையே 'மொழிச்சிக்கலை' அடிக்கடி எழுப்பிக்காட்டும் நிலைமை காரணமாக மக்கள் வாழ்வைவிட, நாட்டின் நலனைவிட, இந்தியின் வாழ்வும் நலனுமே பெரிதாகிக்கொண்டிருக்கிறது என்றும் தெளிவாகிறது.

எதிர்த்து அழிப்பது மட்டுமே நம்கடமை என்பது மட்டும் அல்ல; இந்த வெறித்தனத்திலிருந்து இந்தியத் துணைக்கண்டத்தைக் காத்துத்தீரவேண்டிய கடமையையும், நமக்குக்கட்டாயமாக உண்டாக்கிவிடுவார்கள் போலிருக்கிறது.

துரிதமாக இந்தியல்லாத பகுதி மக்கள் ஒரு அணியின்கீழ்த் திரண்டாலல்லாது, இந்த வெறித்தனத்தைச் சரித்துச் சாய்க்கின்ற வாய்ப்புக்கள் அருகித்தான் காணப்படுகின்றன.

நல்லெண்ணம் படைத்தோர் அனைவரும் அந்த நன்னாளை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள். அத்தகையோருக்கு நமது ஆதரவினையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

★

நினைத்ததெல்லாம் நடந்துவிட்டால்

இரணியல் "கலை"

நடராஜனுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. தபால் சேவகன் வீசிவிட்டுச் சென்ற மஞ்சள் நிற 'கார்டை' எடுத்துக்கொண்டு "அம்மா! அம்மா!" என்று கூவியபடி உள்ளே ஓடினான் உள்ளே சமையல் பாத்திரங்களை கழுவிக் கொண்டிருந்தஅவனுடைய அம்மா, மகன் மகிழ்ச்சியுடன் வருவதைக் கண்டு வேலை செய்வதை நிறுத்திவிட்டு அவனைப் பார்த்தாள்.

"அம்மா! நம்ப கஷ்டமெல்லாவற்றிற்கும் விடிவு காலம் வந்திடிச்சம்மா...நல்ல காலம் வந்திடிச்சம்மா...நீ கஷ்டப்பட்டு என்னை பி. ஏ. வரை படிக்க வைத்தாயல்லவா...இனி நான் சம்பாதித்துக் கொண்டு வந்து போடுவேன்...நீ 'ஜம்முன்று இருக்கனும்......" தன் இதய ஆசைகளையெல்லாம் சொல்லி முடித்தான். மகனுக்கு வேலை கிடைத்துவிட்டது போலிருக்கிறதே என்று சந்தோஷத்துடன் எழுந்தாள் அந்த தாய்.

"...வேலை கிடைச்சுட்டிதா ராஜா...சம்பளம் என்ன?...கடேசியில் கடவுள் கண்ணைத்திறந்தாரா? அவள் கண்களில் கண்ணீர் நிறைந்தது.

அவனுக்குப் பத்து வயதிருக்கும் போது அவனுடைய தந்தை இறந்துவிட்டார். அன்றிலிருந்து எத்தனையோ கஷ்டங்களுக்கிடையில் மகனை வளர்த்துப்படிக்க வைத்தார். 'பி. ஏ.' வரை அவனைப் படிக்கவைப்பதற்கு அவள் பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமா?...சும்மா இருக்கிற நேரத்தில் அப்பளாம், வடாம் இட்டு விற்றல்லவா குடும்பத்தை நடத்தினாள்.

"அம்மா.........கடவுள் கண்ணைத் திறந்துட்டாரம்மா.......... அம்மா! குபேரா பாங்கில் 'காஷியர்' வேலை காலி இருப்பதாக அறிந்து அப்ளிகேஷன் போட்டிருந்தேன். என் படிப்பு தகுதியெல்லாம் அவர்களுக்குத் திருப்திகரமாக இருக்குதாம் ...நாளைக்கு இன்டர்வியூ'விற்கு வரச் சொல்லி அனுப்பியிருக்காங்க..."

'இன்டர்வியூ'விற்கு அழைத்திருந்த கடிதத்தைப் பார்த்தே வேலை கிடைத்துவிட்டதாகமகிழ்ச்சியடையும் நிலையில்தான் அவன் இருந்தான். அவனும் எத்தனையோ இடங்களில் வேலைக்காக எழுதிப் போட்டிருந்தான். ஆனால் எவரும் அவனை இன்டர்வியூவிற்குக்கூட அழைக்கவில்லை. வேலை கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கும் இந்த நாளில் இன்டர்வியூவிற்கு அழைப்பதே பெரிய காரியமல்லவா? அந்த மஞ்சள் நிற கார்டு மங்களகரமான எதிர்காலத்திற்கு அறிகுறி என்று எண்ணிக்கொண்டான்.

அம்மாவிடம் செய்தியை தெரிவித்துவிட்டு வாசலுக்கு வந்தவன் எதிர் வீட்டு ஜன்னலில் பாரதி நின்றுகொண்டிருப்பதைக் கண்டான். அவனுடைய இளம் இதயத்தில் பாரதிக்கு தனி இடம் ஒதுக்கியிருந்தான் அவன். சிறு வயதிலிருந்தே சேர்ந்து பழகிய பாரதி பருவ வயது காரணமாக வீட்டை விட்டு வெளியே வருவதில்லை. ஆனால், அவன் அங்கு செல்வதையோ, அவளிடம் பேசிக்கொள்வதையோ யாரும் தடை செய்வதில்லை.

வேலை கிடைத்தவுடன் அம்மாவிடம் சொல்லி பாரதியை கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்றெல்லாம் கனவு கண்டான்.

அடுத்த நாள்—

குபேரா பாங்க்' மானேஜரின் அறையில் நுழைந்த நடராஜனை உட்காரச் சொன்ன மானேஜர் அவனுடைய 'சர்டிபிகேட்டு'களையெல்லாம் வாங்கிப் புரட்டிப் பார்த்தார். பொதுவாக சில கேள்விகளையும் கேட்டார்.

"கணக்கில் நல்ல மார்க் எடுத்திருக்கிறாய்...அதனால்தான் இன்டர்வியூவிற்கு வரச் சொல்லி எழுதியிருந்தோம். உனக்கு இந்த வேலையைக் கொடுப்பதில் எனக்கு ஆட்சேபணையில்லை..."

"ரொம்பவும் நன்றி சார்" அவன் குரல் கம்மியது.

"...இது பொறுப்பான 'காஷியர்' வேலை..."

"நான் பொறுப்பா கவனத்துடன் வேலை பார்ப்பேன் சார்"

"முதல் முதலாக நூற்றிஐம்பது ரூபாய் சம்பளம் ... ஆனால்...பாங்க் சட்டப்படி ஆயிரம் ரூபாய் டிபாசிட் கட்டணும்..."

நடராஜன் திடுக்கிட்டான்.

ஆயிரம் ரூபாய்!

ஆயிரம் ரூபாய்க்கு எங்கே போவான்? ஆயிரம் தம்படிகூட அவனிடம் இல்லையே?

"என்ன சொல்றீங்க?"

"டிபாஸிட்..." என்றபடி மென்று விழுங்கினான் நடராஜன்.

"உடனடியாக கட்ட முடியல்லேன்னா.........ஒரு வாரம் 'டயம்' தர்றோம்...அதற்குள் கட்டிடுங்க... இந்த வேலைக்காக பலர் பல வழியிலும் முயற்சி செய்றாங்க...நிறைய போட்டியிருக்கு..."

நடராஜன் தலையை ஆட்டிவிட்டு தள்ளாடியபடி வெளியேறினான்.

மகன் சொன்ன சேதி கேட்டு தாயும் திடுக்கிட்டாள்.

ஆறு நாட்கள் அப்படியே ஓடிவிட்டது.

அன்று மாலை; எங்கெல்லாமோ சுற்றிவிட்டு சோர்ந்துபோய் வந்த மகனிடம் தாய் மகிழ்ச்சியுடன் சொன்னாள்!

"கடவுள் கருணை உள்ளவர்தான்டா...நம்ம சிவசங்கரம் பிள்ளை வந்திருந்தார்......ஒரு நல்ல சேதி சொல்லிவிட்டுப் போனார்..."

"என்னம்மா?"

"அவருடைய மகளை நீ கல்யாணம் செய்துக்க சம்மதிக்கறதாயிருந்தால்...உன் டிபாசிட் கட்டறதுக்குப் பணம்தர சம்மதிக்கிறாராம்."

நடராஜன் சிலைபோல் நின்றுவிட்டான். அவன் நாயாக அலைந்தாலும்கூட ஆயிரம் ரூபாயை கனவுகூட காணமுடியாது. கால



மெல்லாம் அவனுக்காக இரத்தம் சிந்தி உழைத்த தாயாரை நல்ல படியாக வாழவைக்க, இந்த வேலையை எப்படியாவது பெற்றுக் கொள்ளாமல் இனியும் அவளை கஷ்டப்படவிடுவதா?

அப்படியென்ருல் சிவசங்கரனின் மகளை கல்யாணம் செய்துகொள்வதைவிட வேறுவழியே இல்லையா?

அப்படி அவன் முடிவு செய்துவிட்டால், பாரதி? தன் இதயத்தின் மஞேகரமான இடத்தில் இருக்கும் அவளுடைய உருவத்தை உதறித் தள்ளிவிட வேண்டியதுதாஞ?

அவன் உள்ளத்தில் எரிமலை குமுறியது. அவனுடைய அன்புருவமான அன்னையின் துயர்களைத் துடைப்பதற்காக தன் இதயத்து ஆசைகளை உதறிவிட அவன் தயாராகிவிட்டான்.

சிவசங்கரம் பிள்ளையிடம் ஆயிரம் ரூபாயைப் பெற்றுக்கொண்டு அவன் குபேரா பாங்கிற்குச் சென்றபோது மாலை ஐந்து மணியாகிவிட்டது. வீட்டிற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த மானேஜர் முன்ஞல் தயங்கியபடி நின்ருன் நடராஜன். அவர் அவனை ஒருதடவை உற்றுப் பார்த்துவிட்டுச் சொன்ஞர்.

"ஓ! நீங்களா?...ஐயாம் ஸாரி... உங்களை மதியம் வரை எதிர்பார்த்தேன்........வேலைக்குப் புதிய ஆள் சேர்ந்திட்டார்..."

நடராஜனிற்கு இந்த உலகமே தட்டாமாலை சுற்றியது போலிருந்தது! ●

உ-ம் பக்கத் தொடர்ச்சி

களில் முன்னேறி உயர்வுபெறும்; இல்லையெனில் பின் தங்கி தாழ்வுறும். அவ்வறிவைத் தரவல்ல மொழிகள் ஆங்கிலம் உருசியன், செருமணி, பிரெஞ்சு ஆகியவையே. இந்தியால் தர இயலா. ஏனெனில் முற்கூறிய துறைகளின் அறிவை அம்மொழி ஆங்கிலம் போன்ற மொழிகள் வாயிலாகவே பெற்று வருவதாலென்க. இந்தி ஆதிக்கத்திற்கு உட்பட்ட மொழியினர் மேலைநாட்டு மொழிகளைப் புறக்கணித்து இந்தி ஒன்றையே கற்ருல் அவர்கள் மேலை நாட்டிற்கிணையான அரசியல், பொருளாதார, வணிகம் போன்ற துறைகளின் அறிவைப் பெருதுபோவர். அதஞல் தமிழர்களின் அரசியல், பொருளாதார வணிக வாழ்வு சீர்குலைந்துபோகும். இதற்கு வித்தாக இருப்பது ஓராசிரியர் இந்திப்பள்ளியேயாதலின் அப்பள்ளிக்கு எல்லாக் கட்சியினரும், எல்லா மக்களும் சேர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து அப்பள்ளி தொடங்கப்படாமல் இருக்க ஆவன செய்யவேண்டும்.

ஓராசிரியர் இந்திப்பள்ளி திறக்கப்படுமாயின் அப்பள்ளியில் படிக்கும் மாணவர்களின் கல்வித்தரம் தமிழ்ப் பள்ளிகளில் பிற பாடங்களில் மிகக் குறைந்து போகும். இந்தி மட்டும் பயின்ருலே நடுவரசில் வேலை கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டால் தமிழ்ப்பள்ளிகளுக்கு வருவதையே மாணவர்கள் நிறுத்திவிடினும் ஆச்சரியப்படுவதற்கில்லை. உலகிலேயே தாய்மொழியைப் புறக்கணிப்பதில், தலைசிறந்தவர்கள் தமிழர்கள் என்று கூறப்படுதலின் தாய் மொழியைப் புறக்கணித்து விட்டு இந்தி மொழியினைக் கற்கத் தொடங்கிஞல் தமிழ் இலக்கிய அறிவைப்பெருது, தமிழ்ப்பண்பாட்டை உணராது கடைப்பிடிக்காது போவதுடன், அவர்களால் தமிழ் மொழிக்கு நாட்டுக்குப் பண்பாட்டுக்குச் சிறந்த பயன் ஏதும் விளையாது போய்விடும். மேலைநாடுகளில், ஆங்கிலம், உருசியன்போன்ற தாய்மொழிப் பாடத்திற்கு இணையாகத் தமிழ்ப்பாடம் ஆக்கப்பட்டு, அதன் கல்வித்தரம் உயராதிருக்கும் இவ்வேளையில் ஒரு வகுப்பிற்கு ஓராசிரியர் என்று தொடக்கப்பள்ளிகளில் ஆசிரியர்களை அமர்த்தி கல்வித்தரத்தை உயர்த்த இயலாநிலையில் பொருள் குறைபாட்டில் இருக்கும் இந்நாளில் வேறு ஒருமொழி கற்பிக்க ஓராசிரியர் பள்ளி திறக்க நடுவரசோ பிரசார சபையோ பொருள் உதவிசெய்யவருவது வெந்த புண்ணில் வேல்கொண்டு நுழைத்த செய்கையையே யொக்கும். எனவே தமிழன் கல்வித்தரம் உயராதிருக்கையில் இந்திக்காகச் செலவிடுவதை, ஓராசிரியர் இந்திப்பள்ளிதிறப்பதை யாரே உடன்படுவர். தமிழ் நாட்டின் கல்வித்தரம் குறைவதற்கும், உலகளாவிய ஆழ்ந்தகன்ற அறிவு வளர்ச்சி பெறுவதற்கும் ஓராசிரியர் இந்திப் பள்ளி தடையாக இருப்பதால் அப்பள்ளியின் பெயரே தமிழகத்தில் இல்லாதவாறு செய்யவேண்டும்.

இதுகாறும் கூறிய காரணங்களிலிருந்து ஏன் ஓராசிரியர் இந்திப் பள்ளி கூடாது என்பது தெளிவாக விளங்கியிருக்கக் கூடும். இக்காரணங்களைப் படித்து உணர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள், அறிஞர்கள், காஞ்சி இதழ் அன்பர்கள், போன்ருேர் பொதுமக்கட்கும், இந்தப்பள்ளியின் விளைவாக ஏற்படும் தீமைகளை உணராதவர்கட்கும் எடுத்துரைப்பார்களாக. தமிழகத்தில் எங்கேனும் ஓரிரு பள்ளிகள் திறக்கப்பட்டிருக்குமாயின் அப்பள்ளி ஏற்படுத்தக் காரணமாக இருந்தவர்களிடமும் அப்பள்ளிக்கு மாணவர்களை அனுப்பும் பெற்ருேர்களிடமும் அமைதியாக, காரண காரியத்துடன் விளக்கி அப்பள்ளியினை எடுத்துவிட ஆவனசெய்வார்களாக; இது ஒன்றுதான்—இதுபோன்ற அமைதிப் புரட்சியின் மூலம்தான் வருங்காலத்தில் தமிழைக் காப்பாற்ற முடியும்!

அண்ணா சமுதாயச் சிற்பி!

17-11-68 ல் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற
அண்ணா கவியரங்கில் பாடியது.

—[கவிஞர் மணிவேந்தன் எம். ஏ.,]—

புண்ணான நெஞ்சத்தை மாற்றி; நம்மைப்
புகழ்என்னும் மஞ்சத்தில் அமர்த்த வல்ல
அண்ணாவின் கவியரங்கில் பாட வந்த
ஆற்றல்சால் கவிஞர்களுக்(கு) என்வ ணக்கம்!
கண்ணான அண்ணன்மேல் பற்றுக் கொண்டு
கருத்தோடு கவியரங்கம் கேட்க வந்த
அண்ணாவின் தம்பியரே! தங்கை மாரே!
அருங்காஞ்சிப் பெரியோரே! வணங்கு கின்றேன்!

பண்ணான சமூகத்தில் பாழும் தீய
பழக்கங்கள் வழக்கங்கள் இருப்ப தேனோ?
எண்ணாமல் சகுனங்கள் ராகு காலம்
இருபதாம் நூற்றாண்டில் பார்ப்ப தேனோ?
உண்ணுதற்கும் உறங்குதற்கும் விதியை நம்பும்
உயிரற்ற தத்துவங்கள் ஏனோ? என்னும்
அண்ணாதான் சமுதாயச் சிற்பி; ஆமாம்
ஆற்றலுடன் சிலைவடிக்கும் அறிவுச் சிற்பி!

கண்ணான சமூகத்தில் சாதி ஏனோ
கணக்கின்றி மக்களுக்குள் பேதம் ஏனோ?
மண்ணின்மேல் மதம்ஏனோ அதனால் தோன்றும்
மடமைகளால் மக்களினம் தாழ்தல் ஏனோ?
புண்ணான புராணங்கள் பொய்கள் ஏனோ?
புழுதிநிகர் விதியேனோ? என்று கேட்கும்
அண்ணாவோர் சமுதாயச் சிற்பி; அன்னார்
அறி(வு)என்ற உளிகொண்டு செதுக்கும் சிற்பி!

முக்குலத்தோர் வேளாளர் கவுண்டர் பிள்ளை
முதலிசெட்டி நாயக்கர் நாடார் ஐயர்
சக்கிலியர் படையாச்சி பறையர் பள்ளர்
சத்திரியர் வாண்டையார் கோனார் என்று
மக்களுக்குள் ஆயிரம் பிரிவுண் டாக்கி
மடமைக்குச் சாதிஎனும் பெயரை வைத்தார்
அக்காலத் தமிழ்ச்சமுதா யத்தில் இல்லை
அநியாயக் காரர்களால் வந்த தொல்லை!

தலையினிலே பிறந்தவனே உயர்ந்தோன்; பெம்மான்
தாளினிலே பிறந்தவனே தாழ்ந்தோன் என்னும்
நிலைமையினை நீடிக்கச் செய்யும் சாதி
நீண்டகொடுங் கரம்நீட்டி வந்த(து) எப்போ?
கலைவாழ்வு செழித்திட்ட தமிழ்நி லத்தில்
காளான்போல் நால்வருணம் வளர்ந்த(து) எப்போ?
சிலையாக வாழ்ந்திருக்க வேண்டாம் என்றார்
சீர்திருத்தம் விழைகின்ற சிற்பி அண்ணா!

விந்தைமிகு வெண்தாடி வேந்தர் வைக்கம்
வீரர்எனச் சரித்திரத்தில் இடத்தைப் பெற்ற
தந்தைபெரி யார்உள்ளம் மகிழும் வண்ணம்
தனயன்ஒரு சட்டத்தைக் கொணர்ந்தார்; ஆமாம்
சந்ததமும் சீர்திருத்தத் திரும ணங்கள்
சட்டத்தால் செல்லுபடி யாகும் என்றார்!
சிந்திக்கும் சிற்பியாக இருந்த அண்ணா;
சீர்திருத்தும் சமுதாயச் சிற்பி ஆனார்!

பண்பாட்டுக் கலப்பாலே பரித விக்கும்
பைந்தமிழன் சமுதாயம் பிழைக்க வேண்டின்
புண்பட்டுப் புரையோடும் சாதி தன்னைப்
பூண்டோடும் அழித்துவிட வேண்டும் என்றார்!

கண்மூடிப் பழக்கத்தை இன்றே விட்டுக்
கலப்புமணம் செய்வோர்க்குப் "பதக்கம்" என்றார்!
வெண்பட்டுப் போல்தூய சமுதா யத்தை
வெண்கலத்தில் வார்த்தெடுக்க விரும்பும் அண்ணா!

பணக்காரன் கோபுரத்தில் குடிவாழ் கின்றான்
பாமரனோ குப்பைமேட்டில் உழலு கின்றான்
குணமுடையோன் நோய்மடியில் வாடு கின்றான்
கோப்பையிலே குடியிருப்போன் மகிழு கின்றான்
தழைவாழ்வு வாழ்கின்ற சமுதா யத்தை
மணம்வாழும் மலர்ச்சோலை ஆக்கச் சொன்னார்
உணவுண்டா? உறக்கந்தான் உண்டா? அண்ணா
ஒப்பற்ற சமுதாயச் சிற்பி என்பேன்!

மதிவிலக்கி மானத்தை விலக்கி நாளும்
மதுகலக்க முடிவெடுத்தார் தேசி யத்தார்!
கதிகலங்கி கருத்தெல்லாம் கலங்கும் வண்ணம்
காந்திமகான் பரம்பரையார் கடைவி ரித்தார்!
விதிவிலக்குக் கேட்போரும் நாணும் வண்ணம்
விழிநிகர்த்த அண்ணாவோ தடைவி தித்தார்!
மதுவிலக்கைத் தளர்த்திடவே மறுத்த அண்ணா.
மண்புகழும் சமுதாயச் சிற்பி என்பேன்!

பண்டொருநாள் வடமொழியும் வந்த தாலே
பாழானோம்; பின்பொருநாள் ஆங்கி லந்தான்
திண்டுமெத்தை விரித்திங்கே படுத்த தாலே
திணறுகிறோம்; நமதுதமிழ்ச் சமுதா யத்தின்
பண்டிருந்த தனித்தன்மை கலப்ப டத்தால்
பரிதவிக்கும் நிலைகண்டு பதறும் வேளை
துண்டுமொழி இந்திமொழி வருகு தென்றால்
தூளாக்கு வோம்என்று துணிந்து சொன்னார்!

"ஏசுபவர் ஏசட்டும் அந்த ஏச்சும்
எனையென்ன செய்துவிடும்? வாய்மை வெல்லும்!
பேசுபவர் பேசட்டும் அந்தப் பேச்சும்
பின்னாலே பேசுவதால் என்ன செய்யும்
வீசுபவர் வீசட்டும் பழிச்சொல் எல்லாம்
விரைந்தவரும் என்னிடத்தில் ஒருநாள் சேர்வர்!
கூசுபவர் கூசட்டும் என்பின் வாரீர்!
குறையற்ற சமுதாயம் அமைப்போம்" என்றார்!

தண்ணீரால் பயிர்திருந்தும்; தணலின் சூட்டால்
தங்கத்தின் ஒளிதிருந்தும்; மேகம் சிந்தும்
கண்ணீரால் நிலந்திருந்தும்; கதிரோன் வந்தால்
காசினியில் துயில்திருந்தும்; காந்தி கண்ட
உண்ணாத நோன்பதனால் பகைதி ருந்தும்
உயிர்த்தமிழைக் கற்பதனால் உளந்தி ருந்தும்
அண்ணாவால் சமுதாயம் திருந்தும்; அன்னார்
அகிலத்தின் பிணிபோக்கும் மருந்தாம் என்பேன்!

கம்பிக்குள் சிறையிருக்கும் போது அண்ணன்
கரம்வடித்த எழுத்துக்கள் எழுச்சி ஊட்டும்
தம்பிக்கு மடல்எழுதும் அறிஞர் அண்ணா
தருங்கருத்து, குருடனையும் விழிக்கச் செய்யும்;
தும்பிக்கே இசையெழுப்பத் தடையா? மக்கள்
துணிவோடு சிந்திக்கத் தடையா? மூட
நம்பிக்கைப் பேர்வழிகள் தடைசொன் னாலும்
நற்கருத்துச் சிலைவடிக்கும் சிற்பி அண்ணா!

உணர்ச்சியின் உறக்கம்

'ஜெ. விஸ்வநாதன்'

தீபாவளிக்கு இன்னும் இரண்டே நாட்கள்...! மாங்காய் பார்டர் போட்ட — அகலக்கரை சரிகை — காஞ்சீபுரம் புடவையை நூறு கடைகளில் ஏறி இறங்கி எனக்குப்பிடித்த வகையில் வாங்கியமனநிறைவோடு அமர்ந்திருந்தேன். இதைக் கட்டிக் கொண்டால் மல்லிகாவுக்கு எப்படியிருக்கும்? மனக்கண்ணுல் அனுபவித்துப் பெருமூச்சு விடுகிறேன். அவள் என் பரிசை ஏற்பாளா?

என் இதயச் செல்விக்கு என் அன்புப் பரிசு! ஏற்காவிட்டால் அவளை யார் விட்டார்கள்...!

"மல்லிகா! மை டியர்..." மனம் அவள் பெயரைத் திரும்பத் திரும்ப உச்சரித்து மகிழ்வுகொள்கிறது. சன்னல் வழியே தெரியும் தொலைதூர அடிவானத்தைக் கைகளால் அணைத்துக்கொள்ள வேண்டும் போல் ஒரு ஆவேசம்...இது என்ன விசித்திரமான கற்பனை? கவிஞனுயிற்றே. நான்—கற்பனை மனம் என் சொத்தாயிற்றே...!

• • •

"காதல்னு என்ன சார்?"

குழந்தையின் மழலையாய், தேன் சிந்தும் இனிய குரலில் அந்தப் பதினெட்டு வயதுப் பருவமங்கை இப்படி ஒரு கேள்வியை என்னிடம் கேட்டபோது எனக்குப் பதில்சொல்லத் தெரியவில்லைதான்!

'ம்...சொல்லுங்க சார். காதல்னு என்ன? பெரிய கவிஞர், லைப்ரரியன் வேறே! எத்தனையோ புத்தகங்கள் படிச்சிருப்பீங்க. உங்களுக்குத் தெரியாதா?..."

உலகமறியாப் பேதையாய், மீண்டும் மல்லிகா அக்கேள்வியைக் கேட்டபோது நான் தடுமாறினேன்; என் மனத்தையே படம் பிடித்துக் காட்டுகிறுர்களா என்ன?

கொள்ளிடம் நதி வளைந்து ஓடியது. மாலைக் கதிரவனின் கிரணங்கள் நீரில் பட்டுப் பொன்துகளாய்த் தெறித்தது. கரையோரமாய் இருந்த சிவன்கோயில் காண்டாமணி 'ஓம் ...ஓம்' என்று முழங்கியது.

கொள்ளிடம் சிறிய ஊர்தான். காவேரித்தாய் அந்த ஊருக்கு மெருகூட்டினுள். ஜன நெருக்கடியான பிரதேசம். அந்த ஊரின் சின்னஞ்சிறு நூலகத்தில் பொறுப்பாளராக என்னைப் போட்டு அனுப்பினுர்கள். இந்தச் சிறிய ஊரில் பொழுது போவது பெரிய பிரச்னை என்று நினைத்துக்கொண்டே பதவி ஏற்ற எனக்கு, எதிர்பாராத விதமாகக் கிடைத்த அறிமுகம் இன்பம் அளித்தது.

'மல்லிகா!' — அதுதான் அவள் பெயர். பெயரே மணக்கவில்லை...? பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு வீட்டுக்குள் புகுந்து கொண்டிருக்கும் எத்தனையோ பெண்களில் அவளும் ஒருத்தி. நூலகத்திற்கு வந்து துணிச்சலுடன் புத்தகம் எடுத்துச் செல்லும் நாலைந்து பெண்களில் மல்லிகா தனி ரகம். குழந்தையிலும் குழந்தை அவள்!

கதைகளைப் படித்துவிட்டு அவள் அழுவாள். சிரிப்பாள், கோபப்படுவாள் குதூகலத்தோடு குதிப்பாள். பாத்திரங்களுக்காக அனுதாபப்படுவாள். அதை எழுதியவர்களைத் திட்டுவாள். "எத்தனை இரக்க சுபாவம் உனக்கு?" என்று நான் ஒருமுறை கூறியபோது "போங்க, சார்! இந்த எழுத்தாளர்களே ரொம்பவும் மோசம். எப்பம் பார்த்தாலும் பெண்களைச் சாகடிக்கறதும், பெண்களைக் கஷ்டப்படுத்தறதும்தான் அவர்களுக்கு வேலையாப் போச்சு, சேச்சே!"

ஒரு தடவை நான் எழுதிய கவிதை வெளிவந்த பத்திரிகையைக் கொடுத்து அவளைப் படிக்கச் சொன்னேன்.

"ஆகா...சார்! இந்த 'மோகினி'ங்கறவங்க எழுதியிருக்கிற கவிதை எவ்வளவு அழகா இருக்கு பார்த்தீங்களா? பெண்களை எவ்வளவு மென்மையா வருணிச்சிருக்காங்க? பெண்ணுக்குத்தான் பெண்ணின் அருமை புரியும்...?"என்று மல்லிகா கூறியபோது கலகலவென்று சிரித்தேன் நான். அவள் விழித்தாள்.

"மல்லிகா! மோகினி என்பது பெண் என்று யார் உனக்குச் சொன்னுர்கள்? அந்தப் புனைப்பெயரில் கவிதைகள் எழுதுவது சாட்சாத் இந்த மணவழகன்தான்!

அவள் விக்கித்து நின்ருள், "நிசமாகவா, சார்? நீங்களா! நம்பவே முடியலையே!"

அன்றிலிருந்து அவள் தொல்லை அதிகமாயிற்று. லைப்ரரியில் புத்தகம் எடுக்க வருவதுடன் மாலை நேரத்தில் குறிப்புப் புத்தகத்தோடு காவிரிக்கரைக்கு நான் செல்லும் சமயங்களில் அவளும்வரத்தொடங்கினுள்.

"சார்! அதோ, செக்கச்செவேலென்று அந்திவானம் எவ்வளவு அழகா இருக்கு. பார்த்தீங்களா? எனக்கு மட்டும் சிறகிருந்தால் அங்கே பறந்து போவேன்......ஏன் சார், இந்தக் காவிரியையும் அந்த வானத்தையும் பாட்டாகப் பாடுங்களேன்..." என்று அவள் எனக்குக் கற்பனையைச் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தாள்.

அம்மாதிரி சமயங்களில் — "வானத்து அழகு உன் முகத்தின் செம்மைக்கு எதிர் நிற்க முடியுமா மல்லிகா?" என்று கூற என் உள்ளம் துடிக்கும். அவளுடைய பல்வரிசை... அடடா, அவள் தான் ரோஜா மலர்போல் எத்தனை அழகாக இருக்கிருள்! அவளுடைய துடிக்கும் இதழ்கள், படபடக்கும் கண்ணிமைகள்......பளபளக்கும் மிருதுவான கன்னங்கள்......, என் கண்ணே பட்டுவிடும்போல் எத்தனை அழகு!

பார்க்கப் பார்க்கப் பரவசம் ஊட்டும் அவளது கவர்ச்சியில் நான் கிறங்கி நிற்பேன் 'என் காதலை அவளுக்குத் தெரியப்படுத்த வேண்டுமே.' அதற்கான சந்தர்ப்பத்தை எதிர் நோக்கினேன். மாலை நேரங்களில் அகநாநூற்றிலிருந்து அழகிய

பாடல்களை எடுத்து சுவை ததும்ப அவளுக்கு விளக்கினேன். அவள் அதை ரசித்தாள். என் உள்ளத்தைப் புரிந்து கொண்டாள்.

குழந்தையாகவே இருக்கிருளே, அவள் என்னைப் புரிந்துகொண்டாளா? இல்லையா? அடிப்படையே புரியாத நிலையில் குழம்பினேன். பாம்பு என்று பயப்படவோ, பழுதை என்று அலட்சியப்படுத்தவோ என்னுல் முடியவில்லை. இந்த நிலையில் தான் ஒருநாள் சிவன் கோவிலில் இருந்து வெளிப்பட்டவள் நேராக என்னிடம் வந்து ஒரு கேள்வியைப் போட்டாள்,

குறிப்புப் புத்தகத்தில் ஒரு கவிதைப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்த சமயம் தூக்கிவாரிப் போடும்படி அவள் கேட்கிருள்;

"காதல்னு என்ன சார்?"

நான் திக்பிரமையடைந்து நின்று விட்டேன். இரண்டாம் முறையும் அவள் கேட்டபோது சமாளித்துக் கொண்டு பதிலளித்தேன். இரண்டு உள்ளங்கள் ஒன்றுக்காக ஒன்று தவிக்கிற தவிப்பு இருக்கிறதே—இன்னொரு உயிருக்காகத் தன்னையே இழக்கத் துணிகிறதே—இன்னொரு ஆத்மாவுக்காகத் தன் அன்பு முழுவதையும் கொட்டிப் பழகுகிற பழக்கம் இருக்கிறதே—அதுதான் காதல்",

"நான் வர்றேன், சார்!" சிட்டுக் குருவியாய் பறந்துவிட்டாள் மல்லிகா, அவள் வைத்திருந்த குண்டுமல்லிகையின் மணம் அவள் சென்ற பின்னரும் சுழன்று கொண்டிருந்தது.

இன்னொரு நாள்—

மல்லிகா கேட்டாள்; 'ஏன் சார், ஒரு ஆண்பிள்ளையைத் தேடிக் கொண்டு ஒரு பெண் வரக்கூடாதா? அது தவறு, சார்?"

எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. அசடுபோல என்ன கேள்வி இது?

"ஆமாம், சார்! நீங்க ஆண் பிள்ளையாம். உங்களைத்தேடிக்கிட்டு நான் வரக் கூடாதாம். வீட்டில் அந்த மணி திட்டுது. என்னுல் உங்களைப் பார்க்காமல் இருக்க முடியாதே, சார்! நான் என்ன பண்ணட்டும்?" கண்ணில் நீர் துளிர்க்க மல்லிகா விம்மினுள்.

"யார் அந்த மணி?" என்றேன்.

"ஊரிலேருந்து வந்திருக்கு சார், எங்க அம்மாவுக்கு தூரத்து உறவாம். பி. ஏ. படிச்சுட்டு இங்கே லீவிலே வந்திருக்கு. அது சொல்லுது, உங்க கூடப் பழகறது தப்பு. இந்த மாதிரி சந்திக்கறதைப் பார்த்தால் நாலுபேர் தப்பாப் பேசுவாங்க'ன்னு..."

"அது உண்மைதான் மல்லிகா, இனி நீ அக்கடி இங்கே வராதே, ஊர் உலகம் பழி சுமத்திப் பேசத் தயங்காது...!"

"போங்க சார், நான் வராமல் இருக்கமாட்டேன். ஒருநாள் வராட்டினுக்கூட எனக்குப் பைத்தியம் பிடிச்ச மாதிரி இருக்கும்." என்று கூறிவிட்டு அவள் சென்று விட்டாள். அவளுடைய அந்தப் பார்வை—சிரிப்பு—நாணம் கவியும் கண்கள்—! அவைகளின் அர்த்தம் தான் என்ன?

யாரையும் மல்லிகா பொருட்படுத்தவில்லை. நாள் தவருமல் மல்லிகா வந்தாள். நானும் சங்க இலக்கியங்களில் அருமையான பாடல்களை விளக்கினேன். என்னுடைய காதலை நேரடியாக எடுத்துச் சொன்னுல் அவளுக்குப்புரியாது என்று இலக்கியத்தின் துணையை நாடினேன். குறுந்தொகையில் ஒரு பாடலை நான் விவரித்தபோது மல்லிகா மெய்ம்மறந்து போனுள்.

"என் தாய் யாரோ, உன் தாய் யாரோ? என் தந்தையும் உன் தந்தையும் எவ்வகையில் அறிவார்கள்? செம்மண் நிலத்தில் பெய்த மழையைப்போல நம் இருவரது நெஞ்சங்களும் அன்பால் ஒன்றுபட்டு விட்டன' என்று தலைவன் தலைவியைப் பார்த்துக் கூறுவதைக் குறுந்தொகையின் வாயிலாக அறிந்ததும் மல்லிகா, "சார்! எவ்வளவோ அர்த்தங்கள் இதில் எனக்குத் தெரியுது" என்று கூறினுள்.

நான் அவளை நோக்கினேன். களங்கமற்ற அவளது அழகில் மனம் கிறங்கினேன். என் உள்ளத்தைத் திறந்து கொட்டிவிடத் துடித்த துடிப்பை சிரமப்பட்டு அடக்க முயன்றேன், "என்ன சார், ஏதோ சொல்ல நினைக்கிறீர்கள் போலிருக்கிறதே..." என்று அவள் கேட்டாள். இப்போது முன்பிருந்த பேதைத்தனம் அவளிடம் இல்லை. மாறிவிட்டாள், அவளா மாறினுள். நான்தான் மாற்றினேன். அவள் குழந்தையாக இருந்ததிலிருந்து இப்போது கொஞ்சம் வளர்ந்திருக்கிருள் என்ற உண்மை எனக்கு நன்ருகப் புரிந்தது.

"மல்லிகா... நான் உன்னிடம் ஒரு விஷயம் சொல்லவேண்டும் என்று நினைக்கிறேன். நாளைக்குச் சொல்வேன். நீ நாளைக்கு வரும்போது உனக்கு ஒரு பரிசும் வைத்திருப்பேன், கட்டாயம் வருவாயல்லவா?" என்று கேட்டேன்.

"இன்னிக்கே சொல்லுங்கள் சார். 'சஸ்பென்ஸ்' தாங்க முடியாது என்னுல், ராத்திரியெல்லாம் தூக்கமே வராது!" என்று அவள் கெஞ்சினுள். "கண்டிப்பாக நாளைக்குச் சொல்கிறேன், மல்லிகா" என்று கூறிவிட்டு எழுந்தேன்.

"நீங்கள் ஒண்ணும் சொல்ல வேண்டியதில்லை போங்கள்!" என்று சிரிக்கொண்டே அவள்

சென்றுவிட்டாள். நிமிடத்துக்கு நிமிடம் உணர்ச்சிகள் மாறுகிறதே இவளுக்கு. இவளைப்போல் ஒரு கபடறியாத குழந்தை மனம் படைத்தவளை என் வாழ்க்கைத் துணைவியாக அடைய முடிந்தால்...? நான் தான் எவ்வளவு பெரிய பாக்கியசாலி!

நான் உங்களைக் காதலிக்கிறேன் என்று மல்லிகா வெளிப்படையாக கூறவில்லையே தவிர அவள் நிச்சயமாக நேசிக்கிருள் என்பதில் சந்தேகமில்லை. நாளைக்கு நான் என் மனதைத் திறந்து காட்டினுல், அவளும் திறந்து காட்டிவிடுகிருள், இருவரும் அப்புறம் இன்பக் கடலில் நீந்துவோம். கனவுகளாய் வந்து இரவு என்னைப் பைத்தியம் பிடிக்க வைத்தன.

தீபாவளி நெருங்குவதை உத்தேசித்து அவளுடைய ரோஜாவண்ண எழில் மேனிக்குப் பொருத்தமாக பொன்னிறத்தில் பட்டுப்புடவை எடுத்துவைத்தேன். என் சேமிப்பையெல்லாம் எடுத்து அவளுக்குப் புடவை மற்றும் சில பரிசுகளாக வாங்கி அட்டைப் பெட்டியில் போட்டு வைத்து மாலை வந்ததும் மனத்துடிப்போடு அவளை எதிர்பார்த்துக் காத்திருந்தேன்.

அவள் வந்தவுடன் எப்படி பேச்சைத் தொடங்குவது — என் பரிசைஎப்படி அவளிடம் கொடுப்பது — அவள் வாங்கிக்கொள்ள ஒருக்கால் மறுத்தால்?—இப்படியெல்லாம் சிந்தனை எனக்குள் ஓடியது.

மாலை மங்கி இருட்கன்னி தலையெடுத்தாள்; மல்லிகா வரவில்லை. உள்ளம் ஓலமிட்டு அலறியது. "ஓ மைடியர்? என்னை ஏமாற்றி விட்டாய்...ஏய்த்துவிட்டாய்!"

ஒரு வாரமாக மல்லிகாவையே காணவில்லைநான். அவள் இல்லாத உலகம் உலகமாகவே தோன்றவில்லை எனக்கு. தீபாவளிக்கு இரண்டு தினங்கள் இருக்கும்போது நூலகத்திற்கே மல்லிகா வந்தாள். கதவைச் சாத்தவேண்டிய நேரம் ஆதலால் நூலகத்தைப் பூட்டிவிட்டு அவளுடன் கிளம்பினேன். அட்டைப் பெட்டியை எடுத்துக் கொள்ளத் தவறவில்லை.

மல்லிகாவின் முகம் பூரிப்பால் பூத்திருந்தது. கொள்ளை மகிழ்ச்சி தாண்டவமாடியது. "சார்! என்னை மன்னிச்சிடுங்க. உங்களுக்குத் தெரியாமல் ஒரு காரியம் நடந்துடுச்சி. ஒருவாரமாக நான் வராதது கூட அதுதான் காரணம். வந்து... வந்து... எனக்கும் 'அது'க்கும் நிச்சயதார்த்தம் பண்ணிருங்க..."

தெருவில் 'படார்...படார்!' என்று வெடிச்சப்தம் காதைத் துளைத்தது. என் இதயத்தில் அணுகுண்டு வெடித்துத் தூள்தூளாகச் சிதறியது. மல்லிகா சொல்லிக்கொண்டே போனுள்: "அதுதான் சார், மணி இல்லே, அது எனக்கு முறைப் பையனும். அதோடு, அது என்னைக் காதலிக்கிறதா சொல்லி யாருகிட்டேயும் சொல்லாதேன்னு முதல்லே சொல்லிச்சு. அப்போ காதலிக்கிறதுன்னு என்னுன்னு எனக்குப் புரியலை. அதனலேதான் உங்ககிட்டே கேட்டேன். "ரெண்டு உள்ளங்கள் ஒன்றுக்காக ஒன்று தவிக்கிற தவிப்புதான் காதல்'னு அழகா எடுத்துச் சொன்னீங்க. வந்து......நானும் அதைக் காதலிச்சேன்! இந்த ஒரு விஷயத்தை மட்டும் என்னுல் உங்ககிட்டே மறைக்கமுடிஞ்சுது. தினம் நீங்க இலக்கியத்தில் காதலைப்பற்றிப் பேசுவீங்க...அப்போ என் மனசில் மணியும் நானுமா நீங்க சொல்கிற தலைவன் தலைவி காதலைக் கற்பனை செய்து பார்ப்பேன்......சார், நீங்க மட்டும் இல்லேன்னு எனக்கு இப்படி ஒரு அறிவும், இப்படி ஒரு அதிர்ஷ்டமும் கிட்டியிருக்காது. நீங்க என் தெய்வம் மாதிரி!... உங்ககிட்டே கூடச் சொல்லவில்லை. எங்க ரெண்டுபேருக்கும் நிச்சயதார்த்தம் முடிஞ்சுடுச்சு. நீங்க என்னை ஆசீர்வதிக்கணும்...!"

நான் பிரமையிலிருந்து விடுபட்டபோது வழக்கமான காவிரிக்கரை மணலில் நான் அமர்ந்திருப்பதும், என் காலடியில் மல்லிகா விழுந்து வணங்குவதும் உணர்ந்தேன். "சேச்சே, என்ன இது? நான் என்ன ஆசீர்வாதம் வழங்குமளவு பெரியவனு? நீ எங்கிருந்தாலும் ஒரு குறையும் இல்லாமல் வாழ்வாய் மல்லிகா!" என்று அவளைத் தூக்கினேன். ஆனந்தத்தால் பனிபடர்ந்த அவள் விழிகளை ஆதுரத்தோடு துடைத்தேன். என் மனத்தில் இப்போது எந்தக் களங்கமும் இல்லை. எங்கே அந்த உணர்ச்சிகள் போயின?

"இந்தா மல்லிகா! இது என் தீபாவளிப் பரிசு. நீ எனக்குக் குழந்தை, இல்லையா? குழந்தைக்குத் தாய்கொடுக்கிற சீதனம் என்று நினைத்துக்கொண்டு இதைப் பெற்றுக்கொள் மல்லிகா!"

கண்களைத் துடைத்துக்கொண்டு அதை வாங்குகிருள். கலீரென்ற நகை பிறக்கிறது அவளிடமிருந்து.

என் உள்ளத்தின் அந்தப் பழைய உணர்ச்சிகள் எங்கே? அவை மீளாத்துயிலில் ஆழ்ந்து உறங்குகின்றனவோ? உறங்கட்டும். உறங்கட்டும்!

★

திரும்பிடுமோ?

மண்ணிற் சிறுவீடு—கட்டி
மகிழ்ந்த நாட்களெல்லாம்
எண்ணிக் கரைகின்றேன்-அவைகள்
ஏங்கத் திரும்பிடுமோ?

ஆடிப் பெருங்காற்றில்—பட்டம்
வானிற் பறக்கவிட்டு
வேடிக்கை கண்டதுண்டு—அது
வேண்டக் கிடைத்திடுமோ?

மேகப் படகினிலே—வானில்
மெள்ளத் துடிப்பசைத்தே
போக நினைத்ததுண்டு—ஏனே
போய்வரக் கூடவில்லை!

உடுக்க ளத்துணையும்—விண்ணில்
உதிர்ந்த பூக்களென்று
தொடுக்க நினைத்திருந்தே-அதனைத்
தூங்கி மறந்ததுண்டு

கோடை மழைப்பெருக்கில்—சின்ன
ஓடம் மிதிக்கவிட்டு
ஓடி யலைந்தசுகம்—இனித்
தேடி வருவதுண்டோ?

—பிறைசூடிப்பித்தன்

களங்கம் கழுவப்பட....

மயிலை ஆ. சொக்கிநாதர் தொண்டைமான்,

அன்புள்ள நண்பா!

எவ்வளவு உயரத்துக்குக் கொட்டி வைத்தாலும் குப்பை மேடு கோபுரமாகிவிட முடியுமா? எவ்வளவு உயரத்தில் மேலே மேலே மேலே பறந்துபோய்க் கொண்டிருந்தாலும் ஊர்க்குருவி, பருந்தாகிவிட முடியுமா? முடியாது என்று உனக்குத் தெரிகிறது. ஆனல் தமிழக சட்ட மன்றக் காங்கிரசுக் கட்சியின் தலைவராக விருக்கின்ற கருத்திருமனுருக்குத் தெரியவில்லையே—என்ன செய்வது?

இந்த கருத்திருமனர் இருக்கிருரே நண்பா, அவர் ஒரு காலத்தில் நல்ல பண்பாளர் என்று கருதப்பட்டிருந்தவர்.

இம்மையில் ஒரு முறை பயின்ற கல்வி, மறுமைக்கு மட்டுமல்லாமல், ஏழு பிறப்புக்கள் (இருப்பது உண்மையானல்) வரையிலும் பயன் தரும் என்கிருர் திருவள்ளுவர்.

கருத்திருமனர் தமிழ் இலக்கியங்களில் நல்ல புலமை பெற்றவர் என்பது மட்டுமல்லாமல், அவர் கம்ப ராமாயணத்துக்குப் புதிய உரை கண்டதனுலும், அதன் தெளிவிலிருந்து இவரும் ஒரு கோவைக் கம்பர் என்றும் பலபடப் பாராட்டப்பட்டுக் கொண்டிருந்தார்—ஒரு காலத்தில்!

இவர் கம்பராமாயணத்தில் 'புலி' அல்ல என்றும், யாரோ ஒருவர் எழுதிய நூலுக்குத் தம் பெயரைப் போட்டுக்கொண்டு பிரசுரித்துக் கொண்டார் என்றும் ஒரு குற்றச்சாட்டு அண்மையில் தமிழகத்தில் நாளேடு ஒன்றில் இரண்டு மூன்று நாட்கள்வரையில் தொடர்ந்து எழுப்பப்பட்டு வந்தது, அதற்கு அவர் இன்று வரையில் எந்த பதிலும், அல்லது மறுத்துக்கூட பேசவில்லை. பேசி, தனக்குக் கொடுக்கப்பட்ட 'கோவைக் கம்பர்' என்ற விருதைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்று நினைக்கவில்லை. ஆகவே அவர் கோவைக் 'கம்பர்'தான? அல்லது கோவைக் 'கொம்பரா?' என்ற ஐயம் ஒருபுறம் தீவிரமடைந்து கொண்டிருக்கிற வேளையிலேயே, திருவள்ளுவர் கல்வியின் சிறப்பைப் பற்றி உயர்வு நவிற்சியாக ஏழு பிறப்புக்கும் பயன் தரத்தக்கது என்று கூறிப் போயிருக்கின்ற கருத்தினையும் இவர் பொய்யாக்கிப் போட்டுக் கொண்டிருக்கிருரே! என்ற வேதனையும் ஒருபால் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

கம்பர் என்ற கவிச்சக்கரவர்த்தி பற்றி நாம் புதிதாக இனி எழுதித்தான் புகழ்சேர்க்கவேண்டும் என்பதில்லை. தன் புகழை ஏற்கெனவே அவர் கால காலத்திற்குமாக நிலைநிறுத்திவிட்டுப் போயிருக்கிருர். காலத்தால் அழியாத புகழுக்குரியவர் என்ருல், அவர் எவ்வளவு உயர்ந்த இடத்தில் வைத்து எண்ணப்பட்டவராக இருந்திருக்க வேண்டும்?

தன்னை வளர்த்து ஆளாக்கிய சடையப்பவள்ளலுக்குக் கம்பர் எந்தெந்த வகையிலே நன்றிக் கடன் ஆற்றியிருக்கிருர் என்பதனை நாடு நன்கறிந்துகொண்டிருக்கிறது.

அந்தப் பேரறிஞனின்—மகாமேதையின் — காலத்தால் அழியாதவனின் பெயரை, தன் விருதாக ஒருவர் கொண்டிருக்கிருர் என்ருல், அந்த விருதுக்குரியவர், கம்பர் புகழை, விழுதாக இருந்தல்லவா காப்பாற்றித் தரவேண்டும்? காப்பாற்றித் தரமுடிந்தவர்—கம்பரது விழுமிய அறிவில் 1000–ல் ஒரு பங்காவது பெற்றிருப்பார்–பெற்றிருக்கவேண்டும் என்றல்லவா நாடு எதிர்பார்க்கும்!

கம்பர் பெற்றிருந்த பண்பாட்டில் 10000–ல் ஒரு பங்காவது பெற்றிருக்க வேண்டுமென்றல்லவா அந்த விருதுக்குரியவரிடம் மக்கள் எதிர்ப்பார்ப்பார்கள்!

'கோவைக் கம்பர்' என்ற விருது கூட அவர் கோவைப் பகுதிக்குரியவர் என்பதாலே சித்திக்கப்பட்டது! கம்பரைப்போல் தஞ்சை மாவட்டத்து தேரழுந்தூரில் பிறந்தவராய் இருந்திருந்தால், தானே 'கம்பர்' என்றுகூட சொல்லிக் கொண்டாலும் ஆச்சர்யப்பட முடியாது! கருத்திருமனரின் வாய்ப்பறைகளின் முழக்கம் அப்படித்தான் நம்மை எண்ணச் செய்கிறது. கம்பர் பெருமானுக்கு இப்படி ஒரு களங்கமா? என்ற அங்கலாய்ப்பும் கூடவே பிறக்கிறது! திருவள்ளுவர் வாக்கைப் பொய்யாக்கிக் காட்ட முடியும் என்பதற்கும் ஒருவர் பிறக்க முடியும் என்று நம்பச் செய்கிறது!

இது தமிழ்நாடு நண்பா! இது 'தமிழ்நாடு'தான் என்று துணிந்து சொல்லலாம். அரசியல் சட்டத்தைத் துணைக்குக்காட்டிகூட சொல்லலாம்!

இந்த தமிழ்நாடு, அன்றிலிருந்து இன்றுவரை எத்தனை எத்தனையோ மேதைகளை ஈன்றுவிட்டிருக்கிறது. அதுபோலவே எத்தனை எத்தனையோ கற்றும், அதன்வழி நில்லாதோரையும் ஈன்றுத் தந்திருக்கிறது!

இந்த நாட்டின் பண்பாடுபற்றி, பக்கம் பக்கமாகப் படித்திருக்கிறேம். அனைத்துலகும் ஒப்பி ஏற்ற பண்புகள் இன்றளவும்கூட உலகத்தின் பல பகுதி

களிலும் உயிரோடு இருந்துகொண்டுதான் இருக்கிறது. ஏனென்றால் தமிழ் மக்களின் உயரிய பண்பாட்டை உலகம் கண்டு வியந்து, தனக்கும் உடன்பாடு என்று, தானும் ஏற்றுக்கொண்ட காலத்திலே, கருத்திருமனார்கள் பிறக்கவில்லை. அதனால் வெளியுலகு, இன்னமும் தமிழ்ப்பண்பாட்டை விரும்பி ஏற்றுக்கொண்டு, பாராட்டியும் வருகிறது.

நண்பா! அன்றைய நாளில் கருத்திருமனார்கள் பிறந்து விட்டிருந்தால், தமிழ் இனத்தின் தலைவிதி எப்படி இருந்திருக்கும்? என்று எண்ணிக்கூட பார்க்க முடியவில்லை. நல்ல வேளையாக கம்பர்கள் மட்டுமே தோன்றியிருந்திருக்கிறார்கள்,

கம்பர் காலத்தில், ஒட்டக்கூத்தர் இல்லையா? என்று புதிய காங்கிரசுக்காரர்கள் உடனே கேட்கத் துடிப்பார்கள். சொல்லி வை நண்பா, ஒட்டக்கூத்தர் என்ற மேதை, தமிழ் நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் முறை தவறானது—திரிபுடையது—களங்கத்துக்குரியது என்று! ஒட்டக்கூத்தரைப் பற்றி நுணுகி ஆராய்வோர் இதனை ஒப்புவர்! ஒப்பியுமிருக்கிறார்கள்.

எனவே, கருத்திருமனார்கள் பிறவாத காலத்தே பரவிய தமிழப் பண்பாடு பிறவி எடுத்த பின் உள்ள, பண்பாட்டைப் பார்த்துச் சிரிக்கிறது. வேதனையோடு சிரிக்கிறது! விழிக் கடையில் நீர் தேக்கி வைத்துச் சிரிக்கிறது! சிரிப்பல்ல அது! சிதைந்த சிந்தையின்—சித்ர வதை அனுபவிக்கும் கொடுமையின் எடுத்துக்காக அது பரிணமிக்கிறது! பார்வைக்குச் சிரிப்பாக மட்டும் தெரிகிறது.

பழந் தமிழ்ப் பண்பாடல்லவா அது! இடுக்கண் வருங்கால் நகுக! என்றறிந்த பண்பல்லவா அது! அதனால் சிரிக்கிறது அந்தப் பழம் பண்பாடு, புதுப் பண்பாட்டைப் பார்த்து! கருத்திருமனாரின் பண்பாட்டைப் பார்த்து!

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு.

என்பது பொய்யா மொழியின் போதனை யல்லவா! நன்றி கெட்ட நாட்டின் நீச்சத்தன்மை பற்றி தனக்குள் அழுதுச் சிரிக்கிறது!

இந்த நாட்டில் காங்கிரசுக் கட்சியின் ஏகபோக ஆதிக்கம் இருந்தபோது, காங்கிரசு அரசு மேற்கொண்ட சில பல நடவடிக்கையில்—அரசின் அனுமதியையும் அணைப்பையும் பெற்றிருந்தாலும், கழக ஆட்சியில் அதே சில நடவடிக்கைகள் தேவையில்லை என்று ஒதுக்கி தன் சீரிய—தெளிந்த தூய தன்மையைக் காட்டிக்கொண்டாலும், கருத்திருமனார்களுக்கு அது மாபாதமாகத் தென்பட்டுவிடுகிறது! அரசியல் மோசடியாக ஆகி—பிரசார சாதனமாகவும் அமைந்து போகிறது என்கிற நிலைமை தோன்றும்போது, பழம் பண்பாடு, புதுப் பண்பாட்டைப் பார்த்து வேதனைப்படாமல் என்ன செய்யும்? சடையப்ப வள்ளலுக்கு நன்றி காட்டிய கம்பரின் பண்பாடு, கூசித் தலைகுனிந்து கொள்ளாமல் என்ன செய்யும்?

காங்கிரசுக் கட்சி நாடாண்ட காலத்தில் காங்கிரசு அமைச்சர்கள் நோய்வாய்ப்பட்டு, அதன் காரணமாக ஆகின்ற செலவுகளை அரசே ஒப்புக்கொண்டு வந்திருக்கிறது என்பது பதிவாகி இருக்கிறது, அரசு 'பைல்'களில்.

அது மட்டுமல்லாமல், அரசு ஊழியர்கள்—அவர் தம் குடும்பத்தினர் முதலானோர் சில பேருக்கு ஆன செலவுகளைக்கூட அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதற்கு முன் உதாரணங்கள் காட்சி தந்து கொண்டிருக்கின்றன.

அண்மையில் தமிழக முதலமைச்சர் அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் அமெரிக்கா சென்று டாக்டர் மில்லர் என்பவரது உதவியால், மறுபிறவி எடுத்து மீண்டிருக்கிறார்கள் என்ற செய்தி இன்னமும் சூடாறிப் போகவில்லை.

முதலமைச்சர் அவர்களுடன், அண்ணியார் அவர்களும், மருத்துவர் ஒருவரும், அண்ணனின் மூத்த புதல்வர் பரிமளம் அவர்களும், பாராளு மன்ற கழக உறுப்பினர்கள் செழியன், ராசாராம் ஆகியோரும் அமெரிக்கா சென்று வந்தார்கள் என்பதை நாடறியும்.

தலைக்குச் சுமார் 40,000 ரூபாய்கள் வரையில் இதற்காகச் செலவாகி இருக்கிறது. இந்தச் செலவில், அண்ணன் அவர்களுக்கும், மருத்துவருக்கும் ஆன செலவு போக மீதி முழுவதையும், தலைமைக் கழகம் ஏற்கெனவே ஏற்றுக்கொண்டு விட்டிருக்கிறது.

முதலமைச்சர் அவர்களுக்கும், மருத்துவர் சதாசிவம் அவர்களுக்கும் ஆகிய செலவை, பழைய நடைமுறைப்படி அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது,

ஆனால், கழகப் பொருளாளரும், தமிழகப் பொதுப் பணித் துறை அமைச்சருமான கலைஞர் கருணாநிதி அவர்கள், அண்ணனுக்கான இந்தச் செலவைக்கூட, அரசு ஏற்கத் தேவையில்லை—கழகமே ஏற்றுக் கொள்வது என்று — நல்ல பண்பாட்டிற்கு ஒரு முன்னுதாரணம் படைத்துக் காட்டி, அறிக்கை விடுத்திருந்தார்—நிதியுதவிக்கு வேண்டுகோள் விடுத்து!

நம் அண்ணன் தமிழ் நாட்டுக்குச் சொந்தமானவர்கள். தமிழ் மக்களது உரிமை-சாசனம் அவர். அவருக்கு ஒன்று என்றால், அது நான்கு கோடி தமிழர்க்கும் என்று பொருள். அதனால் தமிழ் மக்களின் தனிப் பெருந்தலைவருக்கான செலவை, தமிழ் மக்களது கட்சியான கழகமே ஏற்றுக்கொள்வது என்று எடுத்த முடிவுதான் அது. பொருளாளர் என்ற தகுதியோடு, நிதி திரட்டுவதில் வல்லவர் என்ற சிறப்போடு கலைஞர் அவர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அந்த வேண்டுகோளிலேயே, எல்லா விவரங்களையும் துல்லியமாக எடுத்துக் காட்டியிருக்கிறார்.

யார் யாருக்கு அரசு, ஏற்றுக்கொண்டிருக்கிறது. யார் யாருக்குக் கழகம் கொடுத்துவிட்டிருக்கிறது என்று

அரசு ஏற்றுக் கொண்டிருப்பது முதலமைச்சருக்கும், மருத்துவருக்கும் மட்டுமே,

ஆனால் பண்பாளர் கருத்திருமனார் கூறுவதில் அண்ணியார் அவர்களையும் இணைத்துக்கொண்டிருக்கிறார். அது 'அரசியல் மோசடி' என்றும் கயிறு திரிக்கிறார்.

பொய் பேசியே தன்னை மீண்டும் உயிர்ப்பித்துக் கொள்ள முடியும் என்று நம்பிச் செயல்படும் காங்கிரசுக் கட்சிக்கு சட்ட மன்றக் கட்சியின் தலைவர் அல்லவா! அதனால் அண்ணியார் அவர்களையும் இணைத்துக் கொண்டிருக்கிறார்.

கழகப் பொருளாளரின் விருப்பம், அரசு, அண்ணனுக்கான செலவைக்கூட ஏற்கத் தேவையில்லை. அந்த தொகை வேறு ஏதேனும் ஒரு அரசுக் காரியத்துக்கு

ஆகட்டும். கழகத்தின் சொத்தான அண்ணாவுக்கு, கழகமே கடப்பாடுடையது. அதனால் கழகமே அந்தக் காணிக்கையைச் செலுத்தி விடவேண்டும் என்றுதான்!

எந்தவொரு நல்ல காரியத்தையும் செய்து பழக்கப்படாத காங்கிரசுக்கு இது மட்டும் பொறுக்குமா? நல்ல காரியங்கள் செயலாகின்றன என்றாலே, நாட்டு மக்களின் நலிவு எங்கே நீங்கிவிடப் போகின்றனவோ என்று "தடை" போட முயலும் போக்கிலே தங்களை வளர்த்துக் கொண்டு வருவோர்க்கு இது அடுக்கக்கூடிய காரியமாகத் தெரியவில்லை. அரசியல் மோசடியாகத் தெரிகிறது.

அண்ணனது மருத்துவச் சிகிச்சைக்கான செலவை கழகம் நிதி திரட்டிக் கொடுப்பது எந்த வகையில் அரசியல் மோசடி? என்பது புலனாகவில்லை.

இந்தியப் பிரதமர் இந்திரா அம்மையார் தமிழ் நாட்டுக் காங்கிரசுக்காக தேர்தல் பிரசாரம் மேற்கொள்ள வந்தபோது, நாட்டுப் பிரதமர், கட்சிப் பிரசாரத்தில் கலந்துகொள்ள வேண்டிய நேரத்தில் அரசுச் செலவில் வரக்கூடாது என்று கழகம் எதிர்ப்புக் குரல் கொடுத்தது இரு ஆண்டுகட்கு முன்பு.

அந்தக் குரலின் உத்வேகம் கண்டு, அப்போதைய காங்கிரசார், சரி, சரி, ஆட்சி கைவிட்டுப் போனதற்கு இதுவும் ஒரு காரணம்தான் என்று ஒப்பியோ என்னவோ, அந்தச் செலவை தமிழ் நாடு காங்கிரசே ஏற்கும் என்று பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டார்கள். ஆமாம் நண்பா, இதழ்களில் அறிக்கைதான் வெளியிட்டார்கள்.

இரண்டு லட்சம் வரையிலான செலவில், சுமார் 70 ஆயிரம் வரையில் தாங்கள் தரவேண்டியதுதான் என்று ஒப்புக்கொண்டார்கள் அன்று.

தமிழக அரசுக்குச் சேரவேண்டிய அந்தத் தொகை, காங்கிரசு நாணயஸ்தர்களால் இன்னமும் கொடுக்கப்படவில்லை; பேச்சு மூச்சற்றுக் கிடக்கிறார்கள்!

இந்த நிலையில்தான், அண்ணன் செலவைக் கழகம் தர விரும்புவதை, அரசியல் மோசடி என்று வருணிக்க வந்துவிடுகிறார்கள்! யோக்யர்கள் என்ற நினைவில்! தலைவர்கள் என்ற அந்தஸ்தில்!

கருத்திருமனார் அறிக்கையின் ஒரு பகுதியைப் பாரேன்!

"அண்ணாதுரை, அவர் துணைவியார், மருத்துவர் சென்றிருந்தால், அதற்கான முழுத் தொகையும் தமிழக அரசு ஏற்கவேண்டும் என்று நான் வற்புத்தி இருப்பேன்; என் கட்சியும் பரிபூரண ஆதரவைத் தந்திருக்கும். ஆனால்,

நண்பர்களும் புதல்வர்களும் செல்வதற்கெல்லாம் சேர்த்து நிதி திரட்டி அளிப்பது என்பது சரியல்ல—இது கண்டிக்கத்தக்கது! அரசியல் நோக்கம் கொண்டது! ஒரு அரசியல் மோசடியாகும்.

மறுபடியும் படித்துப் பார் நண்பா! நண்பர்களும் புதல்வர்களும் செல்லவா, கலைஞர் நிதி திரட்டுகிறார்? வேண்டிக் கேட்டிருக்கிறார்.

முதலமைச்சர் அவர்களுக்கும், மருத்துவருக்கும் ஆகி இருக்கிற செலவை அரசு ஏற்றிருந்தாலும், அதையும் கழகமே கொடுத்துவிட விரும்புகிறது,

என்றல்லவா கேட்டுக் கொண்டிருக்கிறார் பொருளாளர்!

அரசியல் மோசடியை செய்து காட்டுவது யார்? கழைக் கூத்தாடி, கண்கட்டு ஜாலம் செய்து அரசியல் பேரம் புரிவது யார்? என்று புலனாகிற தல்லவா!

இந்தப் பண்பாடுதான் நண்பா, கோவைக் கம்பரின் பண்பாடு, கொங்கு நாட்டுக் கோமானின் பண்பாடு.

இந்தப் பண்பாட்டைப் பார்த்துதான் தமிழ்ப் பண்பாடு சிரிக்கிறது. சிரிப்பதுபோல் அழுகிறது!

ஒப்புக்கொண்ட அளவுகூட சுற்றுப் பயணச் செலவை இன்னமும் கொடுக்காத அரசியல் பண்பாடு இது.

இந்தப் பண்பாட்டில்தான் காங்கிரசுக்கு மிகப் பெரிய "பாரம்பரியம்" இருக்கிறது. அதனைக் கட்டி வளர்க்கத்தான் அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்துவிடத் துடியாய்த் துடிக்கிறார்கள்.

ஒன்றை மட்டும் தெளிவாய்ப் புரிந்துகொள்ள வேண்டும் நாடு. காங்கிரசில் 'கருத்திருமனார்கள்' மிகுந்துகொண்டிருக்கிறார்கள்! அதனால் அவர்தம் 'பண்பாடுகளும்' வலிவடைந்து கொண்டிருக்கின்றன. இந்த வலிவு எந்த அளவுக்கு மிகுந்து கொண்டிருக்கிறதோ— அந்த அளவுக்கு விரைந்து நாடு பாழாகிப் போகும்! பாழாகிக் கொண்டிருக்கிறது — பாழாக்கி வருகிறார்கள்! என்பதைத் துரிதமாகப் புரிந்துகொண்டாக வேண்டும்.

புரிந்துகொண்டால் மட்டும் சரியாகிவிடாது. செயல்பட்டாக வேண்டும்.

செயல்படத் தொடங்கும் முன் நிச்சயமாக, திரும்பிப் பார்த்துக்கொள்ள வேண்டும்!

நம்மை மட்டுமல்ல—நாடாண்டு சீரழிந்த காங்கிரசையும் பார்த்துக்கொள்ள வேண்டும்! கருத்திருமனார்களையும் பார்த்துக்கொள்ள வேண்டும்! பார்த்துப் புரிந்துகொள்ள வேண்டும். புரிந்து செயல்பட வேண்டும்!

அவ்வாறு ஆற்றுகிற செயலில்தான் எதிர்கால அரசியல் மட்டும் அல்ல—இன்றைய தமிழப்பண்பாடே மறுமலர்ச்சி எய்த வேண்டியதிருக்கிறது.

கடமையாற்ற வேண்டியவர்கள் நாம்! அறுவடையை அனுபவிக்க வேண்டியவர்கள் தமிழ் நாட்டு மக்கள்.

அந்த அறுவடை செழுமையுடையதாக இருந்தால்தான் நம் பணி சிறக்கும்!

சிறக்கச் செய்யும் கடமை நம்முடையது! "செய்வன செய்வோம்! விளைவன விளையட்டும்" என்பது முழக்கமல்ல — 'செய்வன செய்வோம் — செயல்தனை விதைப்போம்" என்பதுவே முழக்கமாக இருக்கட்டும்!

அந்த முழக்கத்தில் கருத்திருமனார்களால் கம்பர்களுக்கு ஏற்படுகின்ற களங்கம் கழுவப்படட்டும்!

அன்புள்ள,

திருவாரூர் முத்துராமன்

வெற்றியே காரணம்

பக்கத்து மாநிலமான கேரளத்திலும் சற்றுத் தொலைவிலுள்ள அரியானாவிலும் நல்ல முறையில் பரிசுச்சீட்டுத் திட்டங்கள் நடந்தேறி வருகின்றன. அந்தப் பரிசுகள் சில தமிழ் நாட்டினருக்கும் விழுந்துள்ளன என்பதையும் நாமறிவோம்.

தமிழ் நாட்டில் இந்தத் திட்டத்தை ஆரம்பிப்பதென்று இதன் ஆரம்பக் கட்டத்தில் சட்டமன்றத்தின் முன் நாம் எடுத்துரைத்த போதும் அறிக்கைகள் விடுத்த போதும் குறைகள் காண எவரும் முன்வரவில்லை. இதில் உள்ள இயற்கை நீதியை அப்போது அவர்கள் உணர்ந்திருந்தார்கள். ஆனால் முதலிரண்டு குலுக்கல்கள் முடிந்தது; அரசுக்குச் சிலகோடி ரூபாய் கிடைத்தது என்று தெரிந்ததும் கண்டனங்களைப் பொதுக் கூட்டங்களில் பேசியும் பத்திரிகைகளில் எழுதியும் வருகிறார்கள். கேரளமும் அரியானாவும் மேற்கு வங்கமும் இந்தப் பரிசுச்சீட்டுத் திட்டத்தை மேற்கொண்டிருக்கின்றன. என்பதோடு மகாராட்டிர மாநிலம் பரிசுச்சீட்டுத் திட்டத்தை நடத்த விரும்பியுள்ளதாயும் உயர்நிலை அதிகாரி ஒருவரை அனுப்பிப் பரிசீலித்து வரும்படிச் சொல்ல எண்ணியுள்ளதாயும் அறிகிறோம். மேலும் சில மாநிலங்களிலும் நடத்த ஏற்பாடாகியுள்ளது. அங்கெல்லாமில்லாத எதிர்ப்பு இங்குமட்டும் இருக்கிறது. அந்த அளவுக்கு இப்பரிசுச் சீட்டுத் திட்டம் அவர்களைக் கவர்ந்துள்ளது. அவர்களை உறுத்துகிறது. ஆகையினால் அவர்கள் கண்டனம் தெரிவிக்கிறார்கள்.

சூதாட்டம் என்கிறார்கள். புதிதாகக் கள்ளுக்கடைகளைத் திறந்துவிட்டார்களே அங்கெல்லாம் அவற்றின் முன் நிற்கின்ற நீண்ட க்யூவரிசைகளைப் படம் பிடித்துப் போட முடியாதவர்கள் பரிசுச்சீட்டுத் திட்டத்தைக் குறைகூற முற்பட்டிருக்கிறார்கள். இது அவர்கள் உள்ளத்தில் உள்ள அழுக்காற்றை காட்டுகிறதே தவிர, தூய்மையைக் காட்டிடவில்லை.

பல்வேறு நிலைகளில் உள்ளவர்கள் பல்வேறு நேரங்களில் என்னைத் தனியே சந்தித்து இம்மாநிலத்தில் கள்ளுக் கடைகளைத் திறந்தால் நல்ல வருவாய் கிடைக்குமென்றார்கள். நான் நிச்சயம் அதற்குப் பலியாக மறுத்துவிட்டேன். அப்படி உறுதியாக இருந்த என்னைப் பாராட்ட ஒரு வார்த்தை கூறாத இவர்கள் இன்றைய தினம் இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டத்தைக் குறைகூறத் துணிகிறார்கள். தமிழ் நாட்டில் நடக்கும் தி. மு. க. ஆட்சி எதைச் செய்தாலும் எதைச் சொன்னாலும் எதிர்ப்பதென்னும் கொள்கையைக் கடைப்பிடிக்கிறார்கள்.

ராஜாஜியே எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார் என்கிறார்கள். ராஜாஜியிடத்தில் எனக்கு மட்டற்ற மதிப்பு உண்டு. ஆனால் அவர் சொல்லுவது தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல; இந்த நாடு முழுவதற்குமாக அவர் சொல்லுகிறார்! அந்தப் பெரியவரது நல்லுரையை மேற்கொண்டு எல்லா மாநிலங்களும் பரிசுச் சீட்டு திட்டத்தை நிறுத்துமானால் அடுத்த நிமிடமே இங்கும் பரிசுச்சீட்டுத் திட்டத்தை நிறுத்துவோம். அது அல்லாமல் இங்கு நடக்கிற காரியங்களை மட்டும் எதிர்ப்பதென்பது முறையுமல்ல—நேர்மையுமல்ல—அரசியலுமாகாது.

பரிசுச் சீட்டுகளை வாங்கிவிட்டு பரிசு விழாதவர்களே இவர்கள்—அந்த ஏக்கத்திலேயே அப்படிக் கூறுகிறார்களென்று சொல்லுகிறார்கள். அத்தகைய ஏக்கம் எனக்குக் கிடையாது. அமைச்சர்கள் எவரும் பரிசுச் சீட்டுகள் வாங்கக் கூடாது என்று விதி செய்துகொண்டிருக்கிறோம்.

பரிசுச்சீட்டுத் திட்டத்தைக் குறைகூறுகின்றவர்களும் கூட குலுக்கலுக்கு நாம் வகுத்துக் கொண்டுள்ள முறையைத் தூய்மையற்றது என்று கூறவில்லை. அவர்களுக்கு இம்முறை கிடைக்கவில்லை என்றால் அடுத்த முறை, அதற் கடுத்த முறை கிடைக்குமென்று மன ஆறுதல் பெறட்டும். இலவுகாத்த கிளிபோல ஆகவேண்டாம்.

தமிழக அரசின் வருவாய்த் துறையைப் பொறுத்த வரை மக்களுக்குச் செய்யப்படவேண்டிய வசதிகளும் அவற்றுக்குச் செலவிடப்பட வேண்டிய தொகையின் அளவும் வளர்ந்து வருகிறது.

நம் மக்களிடத்தில் இனி வரி போட முடியாது. ஏற்கனவே போடப்பட்டுள்ள வரிகள் மக்களை வாட்டி வதைப்பன என்பதை நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவனென்கிற முறையில் நானறிவேன்—வசதிகளைப் பெருக்காமல் மேலும் வரிகளைப் போடுவதென்பது சமூக நீதியாகாது.

வரிகள் மூலம் நமக்குக் கிடைக்கின்ற வருவாய், திட்டத்துக்காக மத்திய அரசு கொடுக்கின்ற நிதி ஆகியவற்றில் பெரும் பகுதி நீர்ப்பாசனம் மின்சாரத் துறை ஆகியவற்றுக்குச் சென்று விடுகின்றது. மீதமுள்ளதைக் கொண்டு நலத்துறை, கல்வி மற்றும் சுகாதாரத்துக்குச் செலவிட முடியவில்லை.

மருத்துவ நிலையங்களிருந்தால் அவற்றுக்குக் காற்றோட்டமான கட்டிடங்கள் இல்லை, மருத்துவர்கள் இருந்தால் நர்சுகள் இல்லை. மருத்துவர்களும் நர்சுகளும் இருந்தால் போதுமான சம்பளம் இல்லை என்ற நிலை இருந்தது. நல்ல மருத்துவ மனைகளும், பள்ளிகளும் இன்ன பிற புதிய வசதிகளும் ஏற்பட—ஆசிரியர்கள் நல்வாழ்வு பெற்றிட மருத்துவர், செவிலியர் போன்றோர் வாழ்க்கைத் தரம் உயர பரிசு சீட்டுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் பணம் பயன்படக்கூடும் இந்த நோக்கம் தூய்மையானது. பரிசு கிடைக்காவிட்டால் போகிறது. அண்ணா அரசுக்கு ஒரு ரூபாய் கொடுக்கிறோம் என்கிறார்கள் சிலர். இது அண்ணாதுரை அரசோ ஆறுமுகம் அரசோ அல்ல, நானும் இந்த அரசின் ஒரு அங்கம்தான் நான் இன்று இருக்கலாம். வேறு ஒருவர் நாளை வரலாம். அரசு என்பது நிலையானது. வந்தால் பரிசு வரட்டும். வராவிட்டால் நல்ல காரியங்களுக்குப் பயன் படட்டும் என்று பரிசுச் சீட்டுக்களை வாங்க வேண்டும் என்று நான் கேட்கிறேன். என்னுடைய சினிமா உலக நண்பர்கள் இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டத்தினால் சினிமா வருமானம் குறைந்துவிட்டது என்று சொல்கிறார்கள். ஆனால் பத்திரிகைகளைப் புரட்டினால் பத்தாவது வாரம் பதினோராவது வாரம் என்று விளம்பரங்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. அது உண்மையாக இருந்தால் இது முழு உண்மையாக இருக்கமுடியாது. சினிமா வருவாய் குறைகிறது என்றால் அது அரசுக்கு நட்டம்தான்.

பரிசுச் சீட்டுத் திட்டம் நடத்துகின்ற மலேசிய நாட்டிலே கலைத்துறையும் நன்றாகத்தான் இருக்கிறது. அங்கு சினிமாக் கொட்டகைகளுக்கு எதிரிலேயே பரிசுச் சீட்டுகளை விற்கின்றனர். வாரத்துக்கு ஒரு குலுக்கல் வீதம் பரிசுத் திட்டம் நடத்தப்படுகின்ற நியூயார்க் நகரில் ஒரு நாடகம் ஆறு வருடங்களாக ஒரே கொட்டகையில் நடைபெற்று வருகிறது. ஆகையினால் அதனால் இது கெடுகிறது என்றோ இதனால் அது கெடுகிறது என்றோ கூறுவது வெறும் மனப்பிரமை.

உண்மையில் சினிமா வருவாய் குறைந்திருந்தால் அதைப் புள்ளி விவரத்தோடு எடுத்துரைத்தால் அவர்களுக்கு ஆறுதல் அளிக்க நான் தயங்கமாட்டேன். ஆனால் நான் ஆராய்ந்து பார்த்ததில் சினிமா வருவாய் குறையவில்லை என்றே தெரிகிறது.

சில பத்திரிகைகள் பரிசுச் சீட்டுகளை வாங்கியதின் மூலம் சிலர் ஓட்டாண்டிகளாகி விட்டதாக எழுதி வருகின்றன. மக்களில் சிலர் லட்சாதிபதிகளாகி வரும்போது இவர்கள் இப்படி எழுதுவது நல்ல சங்கீதக் கச்சேரி நடக்கும்போது நாலு பேர் இரும அதனால் கச்சேரி கலை கட்டாமல் போகட்டும் என்று எதிர்பார்ப்பது போலாகும்.

மக்கள் அவரவர்களது நிலைமையை மிஞ்சி பரிசுச் சீட்டு வாங்க வேண்டுமென்று யாரும் எதிர்பார்க்கவில்லை. விரும்பவுமில்லை — கேட்டுக்கொள்ளவுமில்லை — அப்படி வாங்கினால் அது தவறு.

இந்த திட்டத்தைக் குறை கூறுகின்றவர்களும் இதன் நடைமுறையைக் குறை கூறவில்லை. ஏஜெண்டுகள் நியமிக்கும் போதே அரசினிடத்திலோ அல்லது இந்த அரசை நடத்துகின்ற கழகத்தினிடமோ எவரும் குறைகாண இடமளிக்கக் கூடாது. புகாருக்கு இடமளிக்கக் கூடாது என்று சீட்டுக் குலுக்கிப் போட்டு ஏஜெண்டுகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பரிசுப் பெற்றவர்களுக்கு என் நல்வாழ்த்துக்கள்.

—முதலமைச்சர் அறிஞர் அண்ணா

அறிவுலகம்

சிந்தனையின் பிறப்பிடமே அறிவே யாகும்!
சிக்கலினை அவிழ்ப்பதுதான் அறிவின் தன்மை!
நிந்திக்கும் போதெல்லாம் அடங்கச் சொல்லும்!
நிலைகுலைந்து போகுங்கால் அச்சம் போக்கும்.
முந்தையரின் நல்வாழ்வை எடுத்துக் கூறும்
முழங்காலைக் கட்டுவோரை உழைக்கச் செய்யும்!
எந்தஇடம் சென்றாலும் ஆற்றல் கண்டால்
இருந்துவிடும் மாண்பெல்லாம் அறிவுக் குண்டு!

அறிவுலகம் தனிஉலகம்! அதனின் உள்ளே
அழுக்காறு, அவா, வெகுளிக் கிடமே இல்லை;
அறிவுலகம் அறிவுப்பூ மணக்கும் தோட்டம்!
அம்மணத்தில் பிறமணத்திற் கிடமே இல்லை!
அறிவுலகில் அறிஞருக்குக் கவலை இல்லை!
அழுகிவிடும் உடல்பற்றிக் கவலை இல்லை!
அறிவுலகில் சிந்தனைதான் உயிர்த்து டிப்பு!
அகிலத்தை வழிநடத்தல் அதன்கு றிக்கோள்!

கணக்கற்ற பல்துறைக்கு வழியைக் காட்டும்
கைகாட்டி, அறிவாற்றல் ஒன்றே யாகும்!
பிணக்கெல்லாம் தலைதூக்கும் போதே, ஓங்கிப்
பிடரியிலே அடிப்பதுவோ அறிவே யாகும்!
குணக்கேடர், குற்றத்தைச் செய்யும் மாந்தர்,
கொள்கையினை மாற்றிநல்ல வழியைக் காட்டும்!
பிணம்கூட அறிவாலே பேசிக் காட்டும்;
பொறுத்திருங்கள் அந்நாளும் விரைவில் தோன்றும்!

—சேதரசு—

காஞ்சி 15—12—68 Regd. No. M. 8326

காஞ்சி

பொங்கல் மலரில்

சுவைமிகு கனிகளென

17.12.1968

பேரறிஞர்

அண்ணாவின்

தம்பிக்கு மடல்

அரசியல் நடப்புக்கள்

கதைகள்

மற்றும்

முன்னணி எழுத்தாளர்கள்

பலரது

எழுச்சிமிக்க எழுத்தோவியங்களையும்

படைத்திருக்கிறோம்!

படிக்கத் தவறாதீர்கள்!!

விலை 1-50 ரூ

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.